வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.03.2023 திங்கட்கிழமை | இதழ் : 87 | பக்கங்கள் : 16

# இலங்கை மீது தொடர் அழுத்தம் பிரயோகிக்க தயாராகும் இந்தியா!

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்க வலியுறுத்தி

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்கா தொடர் நெருக்குதல்களை வழங்கி வரும் நிலையில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 13ஆவது அரசமைப்புச் சரத்தை நடைமுறைப்படுத்துமாறும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்குமாறும் இலங்கைக்கு தொடர் அழுத்தத்தைப் பிரயோகிக்க இந்தியா தயாராகி வருகின்றது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

15

## அமெ. செனட்டை உதாசீனப்படுத்தினால் இலங்கைக்கு அதிகளவு பாதிப்பு நேரலாம்!

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சி சபைத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு அமெரிக்க செனட் விடுத்த அறிக்கையினை உதாசீனப்படுத்தினால் இலங்கைக்கு அதிகளவு பாதிப்புக்கள் நேரலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழுவின் சிறப்பு அத்தியாயத்தின் படி, இந்த செனட் குழு 1816 ஆம் ஆண்டு வரை நிறுவப்பட்டது.

அமெரிக்க அரசின் வெளியுறவுக் கொள்கைகள், வெளிநாடுகளுடன் அமெரிக்கா எவ்வாறு உறவைப் பேணுகிறது, அவற்றை எவ்வாறு வலுப்படுத்துவது, எந்தெந்த நாடுகளில் செலவாக்கு செலுத்தவேண்டும் போன்றவை இந்த செனட் குழுவால் தயாரிக்கப்படுகின்றன.

அமெரிக்க

15

## யாழ்.மாநகர சபையில் தமிழரசு முதல்வர் வேட்பாளராக சிறில்!



யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ்.மாநகர சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளராக சொலமன் சிறில் தெரிவாகியுள்ளார்.

நேற்றுக் காலை தமிழ் அரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே முதல்வராக இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் அந்தப் பதவியில் இருந்து

15

## மார்ச் 19 இற்கு முன்னர் தேர்தலை நடத்துங்கள்!

### சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 06

எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தேர்தலை நடத்துமாறு சகல பிரதான எதிர்க்கட்சிகளும் இணைந்து தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரியுள்ளன.

இது தொடர்பில் அவை தேர்தல் ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளன.

அதன்படி, எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்து, கட்சிகளினதும் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட சில

15

## நிரந்தரமாக நாட்டை விட்டு வெளியேறுகின்றாரா நாமல்?



கொழும்பு, மார்ச் 06

இலங்கையில் இருந்து வேறொரு நாட்டுக்கு நிரந்தர வதிவிட அனுமதி தொடர்பான பொலிஸ் அனுமதி அறிக்கையைப் பெற பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முயற்சி செய்துள்ளார் என சிங்கள இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்கள் நாமலிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தானோ அல்லது தனது குடும்பத்தினரோ நீண்ட காலத்துக்கு இலங்கையைவிட்டு வெளியேற மாட்டோம் என்றும் அவ்வாறான திட்டம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கதிர்காமத்தில் இருந்து படையினரை அகற்றுக!

### ரணிலிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 06

ருஹுணு கதிர்காமம் மகா விகாரை மற்றும் அண்மித்த வளாகத்தின் பாதுகாப்புக்காக கடந்த ஜனவரி மாதம் முதல் இணைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு படையினரை விலக்கிக் கொள்ளுமாறு ருஹுணு கதிர்காம மகா விகாரையின் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர ஜனாதிபதி ரணில்

15

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் யாழில் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டார்.

கோப்பாய் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸாருடன் நெருங்கிய தொடர்பை

15

## அரச அலுவலர்களின் எண்ணிக்கை குறைப்பு

கொழும்பு, மார்ச் 06

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை சுமார் 40 வீதம் குறைப்பது தொடர்பில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான சட்ட மூலம் பாராளுமன்றத்தில்

15

## இலங்கை கடல் எல்லைகளுக்குள் இந்திய மீனவரை அனுமதியோம்!

### மீனவர்கள், தமிழ் எம்.பிக்கள் நேற்றுக் கூட்டாக தீர்மானம் போராட்டத்துக்கும் முஸ்தீபு!

யாழ்ப்பாணம், மார்ச் 06

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கும் யோசனைக்கு முழுமையான எதிர்ப்பை தெரிவிப்பதென வடக்கு மாகாணத் கடற்தொழிலாளர் சங்கங்களுக்கும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமது முடிவை இலங்கை, இந்திய, தமிழக அரசுகளுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதுடன், மக்கள் போராட்டமொன்றை நடத்துவதென்றும்

15

## ஓய்வுநிலை எம்.பிக்கள், அமைச்சர்களுக்கு மாதம் 1 கோடி 69 இலட்சம் ரூபா செலவு!

கொழும்பு, மார்ச் 06

ஓய்வுநிலை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு மாதம் 1 கோடியே 69 இலட்சம் ரூபா செலவிடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

260 ஓய்வுநிலை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு பாராளுமன்றத்தினால் தற்போது மாதாந்த ஓய்வுநிலை நிதி வழங்கப்பட்டு வருவதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான மாதச் செலவு சுமார் 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் 176 விதவைகளுக்கு ஓய்வுநிலை நிதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மாதம் தோறும் செலவிடப்படும் தொகை 96 லட்சம் ரூபாய்.

அத்தோடு, 18 வயதுக் குட்பட்ட

15

## இப்படியும் நடக்கிறது...!

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண வைத்தியசாலைப் பணிப்பாளர் ஒரு அறிவிப்பை விடுத்தார்.

வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை வழக்கமாக எரியூட்டி அழிக்கும் தெல்லிப் பழை வைத்தியசாலை உபகரணம் பழுதடைந்து விட்டதால் அதனை அழிப்பதற்கு வவுனியாவிற்கு அனுப்பவிருப்பதாக.

இவ்வாறு அறிவிப்பு வெளியிடப்பட்டதும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

எக்காரணம்கொண்டும் யாழ்.வைத்தியசாலை கழிவுகளை வவுனியாவில் எரியூட்டுவதற்கு அனுமதிக் கப்போவதில்லை என்று.

வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை அழிப்பது என்பது விஞ்ஞானபூர்வமாக ஆராயப்பட்டு செய்யப்படுகின்ற ஒரு விவகாரம். இது சர்வதேச அளவில் செய்யப்படுவதுதான்.

அதற்காக அமைக்கப்படுகின்ற இடங்கள் அந்த பகுதியில் வாழும் மக்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படாதவாறு மிக கவனமாக மாத்திரமன்றி, விஞ்ஞானபூர்வமாக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாண வைத்தியசாலையின் மருத்துவக்கழிவுகள் அழிக்கப்படுகின்ற தெல்லிப்பழை உபகரணம் பழுதடைந்து விட்டதால் அது திருத்தப்படும்வரை வேறு ஒரு இடத்தில் அழிக்கப்படவேண்டியது அவசியமானது. மருத்துவக்கழிவுகளை தேக்கி வைப்பது நல்லதல்ல என்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

வவுனியா வைத்தியசலையின் மருத்துவக்கழிவுகளை அழிப்பதற்கான இடம் ஓமந்தையில் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அங்கே தற்காலிகமாக யாழ்ப்பாண வைத்தியசாலை கழிவுகளையும் எரியூட்டி அழிப்பதற்குத்தான் யாழ்ப்பாண வைத்தியசாலை நிர்வாகம் ஏற்பாடு செய்தது. ஆனால் செல்வம் அடைக்கலநாதனின் எதிர்ப்பு காரணமாகவோ தெரியவில்லை, பின்னர் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் அவற்றை அழிப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாக யாழ். வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி பின்னர் அறிவித்திருந்தார்.

அந்த சம்பவங்களுக்கு பின்னர் நடைபெற்ற சம்பவம் ஒன்றே இந்த ஊர்க்குருவியின் கவனத்திற்கு கிடைத்திருக்கின்றது.

யாழ்ப்பாண வைத்தியசாலை கழிவுகளை வவுனியாவில் அழிக்க ஏற்பாடு செய்வதாக அறிவிக்கப்பட்ட பின்னர் அதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று செல்வம் அடைக்கலநாதன் தெரித்திருந்ததுபற்றி மேலே குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறு அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர்தான், வவுனியா வைத்தியசாலை கழிவுகள் எங்கே அழிக்கப்படுகின்றன என்ற விபரம் அவர்களுக்கு தெரியவந்ததோ தெரியவில்லை.

திடீரென்று வவுனியா வைத்தியசலை கழிவுகள் எரித்து அழிக்கப்படும் இடத்திற்கு முன்னால் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு அவர்கள் ஏற்பாடு செய்தனர்.

அதாவது அது மகக்ளின் சுகாதாரத்திற்கு நல்லதல்ல என்பதுதான் அவர்களின் போராட்டத்திற்கான காரணம்.

ஓமந்தையிலுள்ள அந்த நிலையம் நீண்டகாலமாக இருந்துவருவது அவர்களுக்கு இப்போதுதான் தெரியுமோ என்பது தெரியவில்லை.

திட்டமிட்டவாறு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக ரெலோ கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், மற்றும் ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள் என்று பலர் சென்று அந்த இடத்தில் இறங்கியிருக்கின்றனர்.

ஆனால் அந்த இடத்தில் ஒரு பொதுமகன்கூட காணப்படவில்லையாம். அந்த கிராமத்திலுள்ளவர்களுக்கு ஏற்கனவே அந்த நிலையம் அமைக்கப்பட்டபோதே, சுகாதார துறையினர் அதுகுறித்து விளக்கமளித்து, அதனால் அந்த பகுதியில் வாழும் மக்களுக்கு எந்த தீங்கும் இல்லை என்பது விளக்கமளிக்கப்பட்டே அது தொடங்கப்பட்டதால் மக்கள் தெளிவாக இருந்திருக்கின்றனர்.

இந்த இடத்திற்கு சென்ற தலைவர்கள் வாகனங்களிலிருந்து இறங்காமலே திரும்பி சென்றிருக்கின்றார்கள்.

எம்முடைய கேள்வி எல்லாம், வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டிக் கோரிக்கைக்காக போராடிக்கொண்டிருக்கின்ற இந்த தலைவர்கள், யாழ்ப்பாணத்து வைத்தியசாலை கழிவுகளை வவுனியாவில் எரிப்பதற்கு தயாராக இல்லை என்றால், தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியிருக்கப்போகின்றதோ என்று கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை.!

- ஊர்க்குருவி

# ரூபாவின் பெறுமதி கடும் உயர்வு!

## அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைகிறது

கொழும்பு, மார்ச் 06

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 5 முதல் 6 வீதம் வரை குறைவடையும் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்ததன் காரணமாக இவ்வாறு பொருட்களின் விலை குறையக்கூடும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் சில உணவுப் பொருட்களின் விலைகள் ஏற்கனவே குறைந்துள்ளதாகவும், ஒரு கிலோ சீனியின் மொத்த விற்பனை விலை 17 ரூபாவினால் குறைந்துள்ளதாகவும் சங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

மேலும், ரூபாவின் பெறுமதி வலுவடைவதன் காரணமாக எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் மேலும் குறையும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கச்சதீவில் சங்கிலி அறுப்பு; சந்தேகநபர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 06

தமிழக பக்தர் ஒருவர் உட்பட இரு பக்தர்களின் தங்கச் சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் தடுத்து வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஷாளினி ஜெயபாலச்சந்திரன் உத்தரவிட்டார்.

கச்சதீவு திருவிழாவில் கலந்துகொண்ட தமிழகத்தைச் சேர்ந்த பெண் பக்தர் ஒருவருடைய 8 பவுண் தங்கச் சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டுள்ளது.

தான் ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது தனக்கு பின்னால் நின்றிருந்த ஆணொருவர் சங்கிலியை அறுத்ததாகவும் அதனை தான் அவதானித்தபோது, அந்த நபர் அறுத்த சங்கிலியை தனக்கு பின்னால் இருந்த பெண் ஒருவரிடம் கொடுத்ததும் அந்த பெண் கூட்டத்துக்குள் தப்பிச் சென்றார் எனவும் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

தமிழக பெண்ணுக்கு பின்னால் நின்று சங்கிலியை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார்.

அதேவேளை, இலங்கையை சேர்ந்த பெண்ணொருவரின் ஒன்றரை பவுண் சங்கிலியும் ஆராதனையின்போது களவாடப்பட்டுள்ளது. அப்பெண்ணின் பின்னாலும் கைது செய்யப்பட்ட நபர் நின்றதை அந்த பெண் அவதானித்துள்ளார்.

இரு பெண்களினதும் சங்கலிகளையும் கைது செய்யப்பட்ட நபரே அறுத்தார் எனும் குற்றச்சாட்டில் சந்தேக நபர் நெடுந்தீவு பொலிஸாரினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்துறை பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து, சந்தேக நபரை 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்ட பதில் நீதவான் , தப்பிச் சென்றதாக கூறப்படும் பெண் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அப் பெண்ணை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (அ-3)

# அச்சுவேலியில் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் படுகாயம

யாழ்ப்பாணம், மார்ச் 06

அச்சுவேலி - மகிழடி வைரவர் கோவில் பகுதியில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுக் குழு ஒன்று துரத்தி துரத்தி வாள்வெட்டு நடத்தியுள்ளது.

இரு குழுக்களுக்கிடையில் தொடர்ச்சியாக முறுகல் நிலை இருந்து வருவதாக அச்சுவேலி பொலிஸார் கூறினர்.

இந்நிலையில் ஒரு குழுவைச் சேர்ந்த இளைஞன் அச்சுவேலி நகருக்கு வந்த நிலையில் மற்றைய குழுவைச் சேர்ந்தவர்கள் அவரைத் துரத்தி துரத்தி வெட்டிவிட்டு தப்பிச் சென்றனர்.

சம்பவத்தில் பாரதி வீதி, பத்தமேனியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் ஒருவனே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிக்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அவுஸ்திரேலிய தேர்தலில் களமிறங்கும் ஈழத் தமிழன்!

கான்பரா, மார்ச் 06

அவுஸ்திரேலியாவில் மே மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பெடரல் தேர்தலில் தமிழர்களும் களமிறக் கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கிரீன் கட்சி சார்பாக சுஜன் என்ற தமிழ் இளைஞர் தேர்தலில் களமிறங்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் மனித உரிமை செயற்பாடு, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான செயற்பாடு மற்றும் குடிவரவு குடியகல்வு செயற்பாடுகளில் தமிழர்களுக்கு முழு ஆதரவை வழங்கி வரும் சுஜன், சிட்னி மாநில தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளார்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அதிக தமிழர்களைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா மாநிலத்தில் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வரும் சுஜன் சிறந்த சமூக, மனித உரிமை செயற்பாட்டாளராகவும் பணிபுரிந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் இவர் 15 வயதில் நாட்டை விட்டு புலம் பெயர்ந்து, அவுஸ்திரேலியாவில் வதிவிடத்துடன் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் 2015 ஆம் ஆண்டு முதல் கிரீன் கட்சியில் பல தேர்தல்களில் களமிறங்கியுள்ளார்.

கிரீன் கட்சியானது சமூக நலச் செயற்பாடு, மனித உரிமை செயற்பாடு மக்கள் நலன் திட்டங்களை முன்னெடுக்கும் ஒரு கட்சியாக திகழ்கின்றதால் எமது தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு ஒரு குரலாக தான் அதில் களமிறங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் புலம் பெயர்ந்துள்ள மக்களது பிரச்னைகளுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்ய முடியும் என அவர் கூறினார். (அ)

Eelanadu 06.03.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் தலைவர்களை எவர் விரட்டுவது?

தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் - ராஜபக்ஷக்களை போல், ஏனைய தலைவர்களையும் மக்கள் விரட்டுவார்களென்று குறிப்பிட்டிருக்கின்றார். ராஜபக்ஷக்களை ஆதரித்த சிங்கள மக்களே, அவர்களுக்கு எதிராக வெகுண்டெழுந்தனர். கோட்டாபய ராஜபக்ஷவை தலையில் தூக்கிவைத்து கொண்டாடியவர்களே, அவரை, பின்கதவு வழியாக ஓடவைத்தனர். சிங்கள மக்கள் மத்தியில் அவ்வாறான வெகுசன திரட்சி அரசியல் இருக்கின்றது. ஒரு கட்டத்தில் வெளியில் வந்தார்களென்றால், நாட்டை கதிகலங்க வைப்பார்கள். கோட்டாபய ராஜபக்ஷ விடயத்தில் சிங்கள மக்கள் அதனை நிரூபித்திருக்கின்றனர்.

ஆனால் கடந்த 74 வருடங்களாக, சமஷ்டி பற்றி பேசி தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற, கிடைக்கும் வாய்புக்களை பயன்படுத்தாது, தங்களது குடும்ப நலன்களை மட்டுமே முன்னுரிமைப்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் என்போரை யார் விரட்டியடிப்பது? அவர்களுக்கு எதிராக மக்கள் வெகுண்டெழுமாட்டார்களா? ராஜபக்ஷக்களை அதிகாரத்திற்கு கொண்டு வந்ததிலும், வீழ்த்தியதிலும் தமிழ் மக்களுக்கு தொடர்பில்லை. ஆனால், தமிழ் மக்களால் தொடர்ந்தும் அரிய ணையில் அமர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும், போலிப் பெருமைகள் பேசும், காலாவதியாகிப்போன பழசுகளை எப்போது தமிழ் மக்கள் விரட்டியடிப்பார்கள், எப்போது தமிழ் மக்கள், இளைய தலைமுறைக்கு வாய்ப்பை வழங்குவார்கள்?

இப்போது தமிழர்கள் சிந்திக்க வேண்டியது ராஜபக்ஷக்கள் பற்றியோ அல்லது ரணில் விக்கிரமசிங்கக்கள் பற்றியோ அல்ல - மாறாக, ஒவ்வொரு தேர்தல்களிலும் போலியான வாக்குறுதிகளை வழங்கும், நடைமுறைச் சாத்தியமான விடயங்களை புறம்தள்ளி, மக்களுக்கு போலியான நம்பிக்கைகளை ஊட்ட முயற்சிக்கும், தமிழ் அரசியல் தலைவர்களின் போலித்தனங்கள் பற்றியே, தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் கலையாகும். ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலில் அடையக் கூடிய விடயங்களை மட்டுமே அடையமுடியும். ஆனால் காலத்தை தவற விட்டு விட்டு, மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அரசியலையே தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர் முன்னெடுத்து வருகின்றனர். நிலைப்பாடுகளை கவர்ச்சிகரமாக முன்வைப்பவர்கள் அவற்றை அடைவதற்காக என்ன செய்கின்றார்கள்? ஐ.நா விற்கு, தனித்தும் கூட்டாகவும் போட்டி போட்டுக் கொண்டு, கடிதம் அனுப்புதல், வெளிநாட்டு தூதரகங்கள் அழைத்தால் அங்கு சென்று தேனீர் அருந்துவது, வருடத்திற்கு ஒரு ஆர்ப்பாட்டம் அல்லது கறுப்புக்கொடி காட்டும் நிகழ்வுகளை செய்வது, இவற்றை தவிர, கொழும்பை கீழிறங்கிவருவதற்கு தமிழ் கட்சிகள் முன்னெடுத்த விடயங்கள் என்ன? இவ்வாறான விடயங்களை முன்னெடுப்பதற்கு கட்சிகள் தேவையில்லை. இதனை சிவில் சமூக குழுக்கள் என் போரே செய்து விட்டுப் போகலாமல்லவா.

கடந்த 13 வருடங்களில் தமிழ் தேசியத்தை பெயரில் வைத்திருந்த எந்தவொரு கட்சியும், விடயங்களில் முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை தவறென்று நிரூபிப்பதற்காக பல்வேறு கதைகளை புனைந்தவர்களும், கூட்டமைப்பிலிருந்து தாங்களை வேறுபடுத்திக் காண்பிப்பதற்கான அர்ப்பணிப்புக்களை இதுவரையில், காண்பிக்கவில்லை. வெறுமனே மற்றவர்களுக்கு முகவர், கைக்கூலிகளென்று பட்டம் சூட்டும் முயற்சிகளிலேயே ஈடுபட்டனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழர் அரசியலில், பெரியளவிலான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்றால், அரசியல் பழசுகளை நோக்கி, தமிழ் மக்கள் ஆவேசமாக திரும்பினால் மட்டுமே மாற்றங்களை காணமுடியும்.

# கோடீஸ்வர வர்த்தகர் கொலை; இருவர் பொலிஸாரினால் கைது

*கொழும்பு, மார்ச் 06*

பாணந்துறை டி.டிமன் சில்வா மாவத்தையில் சொகுசு ஜீப்பில் பயணித்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

கிரில்லவல, பங்களாவத்தையில் வசிக்கும் 57 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் ஜீப் வண்டியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், கொலையை மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்த வந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த சாரதி ஆகியோர் நேற்றுக் காலை தெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜின் மெல்லகஹ பகுதியில் வைத்து களுத்துறை குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கைத்துப்பாக்கி மற்றும் 8 தோட்டாக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டுக்காக வந்த மோட்டார் சைக்கிள் வாத்துவ பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 34 மற்றும் 40 வயதுடைய ஜின்மெல்லகஹ பகுதியைச் சேர்ந்தவர்கள்.

சந்தேகநபர்கள் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# மூன்றாம் தவணை முடிவதற்குள் சீருடை



*கொழும்பு, மார்ச் 06*

பாடசாலை மூன்றாம் தவணை முடிவதற்குள் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சீன நன்கொடையின் கீழ் இலங்கை பெற்றுக்கொண்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் உத்தியோகபூர்வமாக நாளை செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொள்ளப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மாணவர்களுக்கான பாடப் புத்தக விநியோகம் 3ஆம் தவணை முடிவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் குறிப்பிட்டார். (அ)



# நிறுத்தப்பட்டது உதயதேவி!

*கொழும்பு, மார்ச் 06*

சாரதியின்மை காரணமாக, கொழும்பு கோட்டைக்கும், மட்டக்களப்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் உதயதேவி கடுகதி ரயில் சேவை முதற்தடவையாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் முதல் இவ்வாறு சேவையில் ஈடுபடவில்லை என ரயில் கட்டுப்பாட்டு நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதேநேரம், இன்றும் குறித்த உதய தேவி கடுகதி ரயில் சேவையில் ஈடுபடாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தாட்சாயணிக்கு கௌரவம்

*யாழ்ப்பாணம், மார்ச் 06*

படைப்பாளுமை தாட்சாயணியை (திருமதி பிரேமினி பொன்னம்பலம் - சங்கானை பிரதேச செயலர்) கௌரவிக்கும் நிகழ்வு நேற்று தொல்புரம் மேற்கு சுழிபுரம் சத்தியமனை நூலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து சிறுவர்களின் கவிதைப் பா உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. விழாவின் கதாநாயகியான திருமதி பிரேமினி பொன்னம்பலம் ‘தாட்சாயணி’என்ற புனைபெயரில் தனது எழுத்து பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-3)





# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 06 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 22
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
புதுவேலை கிடைக்கும். பழைய கட னைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாய்வழி உற வினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியா பாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக் கும் அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலைஉயர்ந்த பொருட் கள் வாங்குவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷ யங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டி ருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங் கும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரை யும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயன டைவீர்கள். புது பொருள் வந்து சேரும்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அவசரப் பட்டு அடுத்தவர்களைவிமர்சிக்க வேண்டாம்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் நற்காரியம் மற்றும் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார் கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

# இயல்பு நிலைக்கு திரும்பியது ஈரோடு கிழக்கு!

சென்னை, மார்ச் 06

தேர்தல் விதிமுறைகள் விலக்கி கொள்ளப்பட்ட நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியின் எம்.எல். ஏயாக இருந்த திருமகன் ஈவெரா கடந்த ஜனவரி மாதம் 4ஆம் திகதி இறந்தார். இதை யடுத்து ஈரோடு கிழக்கு தொகுதிக்கு பெப்ப்ரவரி 27 ஆம் திகதி தேர்தல் நடத்தப் படும் என ஜனவரி 18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இதையடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமுலுக்கு வந்தது. இதனால் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணமின்றி பணம் கொண்டு செல்லக்கூடாது என்பது உள்பட பல்வேறு கட்டுப்பாடு களை தேர்தல் அதிகாரிகள் விதித்தனர். இதையடுத்து கிழக்கு தொகுதி முழுவதும் சோதனை சாவடிகள் அமைத்து பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

ஈரோடு ஜவுளி மற்றும் மஞ்சள் தொழில் நகரமாக திகழ்வதால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் தினமும் ஏராளமான வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் ஈரோடு வந்து ஜவுளி மற்றும் மஞ்சள் உள்பட பல வேறு பொருட்களை வாங்கி செல்வார்கள். இந்த நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்ததால் வியா பாரிகள் ஈரோட்டுக்கு வர தயக்கம் காட்டி வந்தனர். ஒரு சிலர் மட்டுமே வந்து வியாபா ரம் செய்து வந்தனர். இதனால் புடைவை மற்றும் மஞ்சள் வியாபாரம் கடந்த 40 நாட்க ளுக்கும் மேலாக மந்தமாகவே காணப்பட்டது. இந்த நிலையில் கடந்த 2-ந்தேதி தேர்தல் முடிவுகள அறிவிக்கப் பட்டது. இதை தொடர்ந்து நேற்று முன் தினம் தேர்தல் விதிமுறைகள் விலக்கி கொள் ளப்பட்டது. இந்த நிலையில், நேற்று ஈரோடு இயல்பு நிலைக்கு திரும்பியது. இத னால் நேற்று வியாபாரிகள் பலர் வழக்கம் போல் ஈரோடு புடைவைச் சந்தைக்கு வந்து தங்களுக்கு தேவையான ஜவுளி வகைகளை வாங்கிச் சென்ற னர். (அ)

# மதுரை சென்றார் மு.க. ஸ்டாலின்

மதுரை, மார்ச் 06

முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் இரண்டு நாள் பயணமாக நேற்று மதுரை சென்றார் . சென்னையில் இருந்து விமா னம் மூலம் மதுரை வந்த அவ ருக்கு அமைச்சர்கள்,மற்றும் , திமுக நிர்வாகிகள் உற்சாக வர வேற்பு அளித்தனர் . அமைச்சர் கள் கே.என்.நேரு, மூர்த்தி, பி.டி.ஆர், தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி உடனிருந்தனர் . இதனைத் தொடர்ந்து கார் மூலம் அழகர்கோவில் ரோட் டில் உள்ள சுற்றுலா விருந்தினர் மாளிகைக்குச் சென்றார். அங்கு சிறிது நேரம் ஓய்வு எடுத்தபின் மதுரை கலெக்டர் அலுவலகத் தில் நடக்கும் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார். இதில் மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்ட கலெக்டர் கள் மற்றும் பொலீஸ் அதி காரிகள் கலந்து கொண்டனர். அவர்களுடன் மு.க.ஸ்டாலின் அரசின் வளர்ச்சி திட்டங்கள், மாவட்டத்தில் சட்டம் - ஒழுங்கு போன்றவற்றை குறித்து ஆலோசனை நடத்தினார். (அ)

# திருமங்கலத்தில் பெரும் தீ விபத்தில் 40 மின்சார மோ. சைக்கிள்கள் நாசம்

சென்னை, மார்ச் 06

திருமங்கலத்தில் மின்சார மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 40 மோட்டார் சைக் கிள்கள் எரிந்து நாசமாயின.

சென்னை திருமங்கலம், வெல்கம் சாலையில் மின்சார மோட்டார் சைக்கிள் விற்பனை மற்றும் சேர்வீஸ் நிலையம் உள்ளது. நேற்று முன்தினம் மாலை இந்த விற்பனை நிலையத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.இதனால் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் அலறி அடித்து வெளியே ஓடி வந்தனர். அதற்குள் தீ மளமள வென பரவி அங்கு நிறுத்தி இருந்த மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கும் பரவி யது. இதுபற்றி தகவல் அறிந்துவந்த ஜெ.ஜெ. நகர் மற்றும் வில்லி வாக்கம் தீயணைப்பு நிலைய வீரர்கள் சுமார் 30 நிமிடங்க ளில் தீயை அணைத்தனர். எனினும் தீ விபத்தில் விற்ப னைக்கும், பழுது பார்க்கவும் வைத்து இருந்த 40இற்கும் மேற்பட்ட மின்சார மோட் டார் சைக்கிள்கள் முற்றிலும் எரிந்து நாசமாகின. இது குறித்து திருமங்கலம் போலீ சார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதல் கட்ட விசாரணையில் மின் கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டது தெரியவந்தது. இந்த தீ விபத்தால் அப்பகுதி யில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (அ)



# குழந்தைகளுக்குத் தூய தமிழ் பெயர் வையுங்கள்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, மார்ச் 06

வீட்டில் அரசியல் பேசுங்கள், குழந்தைக ளுக்கு தூய தமிழ் பெயர்கள் வையுங்கள் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கரூர் மாவட்ட அமைச்சராக இருந்தாலும் கோவை மாவட்ட பொறுப்பாளராக அமைச்சர் செந்தில் பாலாஜியை முதலமைச்சர் நியமித்தார். அவர் உள்ளாட்சி தேர்தலில் 90 சதவீத வெற் றியை தேடி தந்தவர். அவர் தான் முழு வெற்றிக்கு காரணம். கடுமையான உழைப்பாளி. மண மக்களுக்கு தாலி, பட்டு வேட்டி, சேலை உள்பட சீர்வரிசை பொருட்களை பார்த்து பார்த்து அமைச்சர் செந்தில் பாலாஜி செய்துள்ளார். இங்கு நடந்தது சுயமரியாதை திருமணம். அந்த காலத்தில் இந்த மாதிரியான சுயமரியாதை திருமணத்தை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார் கள். அதற்கு அங்கீகாரம் கொடுக்க வலியுறுத்திய வர் பெரியார். முன் மொழிந்தவர் அண்ணா. அதனால் தான் தொடர்ந்து கலைஞரும், முதல்- அமைச்சரும் சுயமரியாதை திருமணத்தை நடத்தி வருகின்றனர். யாரும் யாருக்கும் அடிமை இல்லை. மணமக்கள் அ.தி.மு.க, பா.ஜ.க போல் இருக்காதீர்கள். யாருடைய காலிலும் விழா தீர்கள். காலில் விழுந்தவர்கள் நிலைமை என்ன என்பது தெரியும். பெற்றோர், அவரவர் முன்னோர்களின் கால்களில் மட்டுமே விழ வேண்டும். தவறு செய்தால் மனைவி காலில் கூட விழலாம். ஆனால் எப்போதும் உங்கள் உரிமையை மட்டும் விட்டு கொடுக்காதீர்கள். இங்கு வந்துள்ள மணமக்களுக்கும் மற்றும் அவர்களது உறவினர்களுக்கும் நான் ஒரு வேண்டுகோள் மட்டும் வைக்கிறேன்.

உங்களுக்கு பிறக்க கூடிய குழந்தைகளுக்கு நீங்கள் சுத்தமான தமிழ் பெயர்கள் வையுங்கள். கொஞ்சம், கொஞ்சமாக இந்தி மொழியை கொண்டு வருகிறார்கள். தற்போது என்ன பெயர் வைக்கிறார்கள் என்றே தெரியவில்லை. சிலர் வாயில் நுழைய முடியாத அளவுக்கு பெயர்களை வைக்கிறார்கள். எனவே சுத்தமான தமிழ் பெயர் வையுங்கள். வீட்டில் அனைவரும் அரசியல் பேச வேண்டும். மத்திய அரசு என்ன செய்கிறது? தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது, 5 லட்சம் கோடி கடனை முந்தைய அரசு விட்டு சென்றது. அதனை திறம்பட கையாண்டு சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறோம் - என்றார். (அ)

ஈழநாடு



# எந்தத் தேர்தல் முதலில் என ஊகிக்க முடியாத நிலைமை

## பஸில் ராஜபக்ஷ கூறுகின்றார்




கொழும்பு, மார்ச் 06

**நாட்டில் எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்பதனை தங்களால் ஊகிக்க முடியவில்லை என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

எந்தத் தேர்தல் நடந்தாலும் பொதுஜன பெரமுனவே வெற்றியடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எந்தத் தேர்தலிலும் தோற்ற வரலாறு மொட்டுக் கட்சிக்கு இல்லை எனவும் அவர் கூறினார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் தொடர்ந்து பிற்போட முடியாது எனவும், மக்களின் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடமும் அடுத்த வருடமும் தேர்தல்களுக்கான வருடங்கள் எனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் பாராளுமன்றத் தேர்தல் மூலம் மாத்திரம்தான் அரசாங்கத்தை மாற்ற முடியும் எனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

# சர்வதேசம் கைகொடுத்திருக்காவிட்டால் புலிகளை தோற்கடித்திருக்க முடியாது

## கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, மார்ச் 06

எல்லைகளை கடந்து நாங்கள் எங்கள் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்பட்டிருக்காவிட்டால் எங்களால் விடுதலைப் புலிகளை தோற்கடித்திருக்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீங்கள் சரியாக நினைவில் வைத்திருப்பீர்கள் என்றால் விடுதலைப்புலிகளின் 9 ஆயுத கப்பல்களை இலங்கை கடற்படை அழித்தது இது எங்களது புலனாய்வு பிரிவினர் அமெரிக்க புலனாய்வு பிரிவினருடன் ஒத்துழைத்ததன் காரணமாகவே சாத்தியமானது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்காவின் புலனாய்வுத் தகவல்களே உதவின என்பது எங்களுக்கு தெரியும் - என்றார். (அ)

# வேட்பாளர்களான அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாத நிலைமை!

## கை விரித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நிவாரணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைவாக, தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதற்காக அரச பணியாளர்கள் சம்பளமில்லாத விடுப்பு எடுத்துள்ளனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாது என்பதால், குறித்த வேட்பாளர்களில் பலர் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

தேர்தல் செயல்முறை தொடர்வதன் காரணமாக அவர்கள் மீண்டும் தொழிலுக்கு திரும்புவது தடைசெய்யப்பட்டுள்ள போதும், இந்த வேட்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது என நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார். (அ)

# பாராளுமன்ற உணவகத்தில் பால், முட்டைக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 06

பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உணவறையில் பால் மற்றும் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாராளுமன்றத்துக்கு உணவு விநியோகிக்கும் தரப்பினருக்கான கொடுப்பனவு வழங்கப்படாமையே இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, மின்சாரம், எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமையினால், பாராளுமன்றத்தில் உணவுக்கான செலவு 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் உணவுக்காக மாதாந்தம் சுமார் 90 இலட்சம் செலவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அது தற்போது ஒரு கோடியைத் தாண்டியுள்ளதாகவும் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஆடை ஏற்றுமதி வீதம் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 06

2023ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் ஆடை ஏற்றுமதி 18.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆடை ஏற்றுமதியின் ஊடாக கடந்த வருடத்தில் இந்த காலப்பகுதியில் 478.9 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. எனினும், பொருளாதார மந்த நிலை காரணமாக, டிசெம்பர் மாதத்தில் ஏற்றுமதி 8.7 சதவீதமாக குறைவடைந்தது.

இதன்படி, இந்த வருடத்தில் ஆடை ஏற்றுமதியின் ஊடாக, 388.9 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது. (அ)

# லிட்ரோ விலை மாற்றமில்லை!

கொழும்பு, மார்ச் 06

லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படாது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விலை சூத்திரத்தின் படி, எரிவாயு விலை ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதி மாற்றியமைக்கப்படுகிறது.

விலைச் சூத்திரத்தின் பிரகாரம் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட வேண்டியிருந்தாலும், டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை கருத்தில் கொண்டு விலையை மீளாய்வு செய்யப்போவதில்லை என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய இம்மாதம் அதே விலையில் எரிவாயு விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் 50 பாடசாலைகளை மூடவேண்டிவரும்

## ஆறு திருமுருகன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 06

இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூட வேண்டி வரும் என கணிப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

உரும்பிராய் ஞானவைரவர் சமூக அறக்கட்டளை சார்பில் உரும்பிராய் பகுதியை சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் உரும்பிராயில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருக்கும் பெரிய பிரச்னை சனத்தொகை குறைந்துள்ளமை. அதனால் இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூடவேண்டி வரும் என கணிப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

பூங்குடுதீவு, வேலணை மற்றும் அனலைதீவு போன்ற பகுதிகளில் பாடசாலைகளானது மூடப்பட்டு வருகின்றது.

போதாக்குறைக்கு தீவகத்தில் இன்டர்நஷனல் பாடசாலை ஒன்றினை பெரிய அளவில் ஏற்பாடு செய்து மதம் சார்ந்த பாடசாலை ஆக அனைவரையும் ஈர்க்கின்றார்கள்.

ஏற்கனவே உள்ள பாடசாலைகள் கதவு மூடப்படுகின்ற தருவாயில் இன்டர்நஷனல் பாடசாலை திறக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் தனியாரை தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லாத நிலை காணப்படுகிறது.

அறச் சிந்தனையுடன் ஆரம்பிக்கப்படுகின்ற இவ் அறக்கட்டளை முதலாவது கட்டத்தில் 50 லட்சத்துக்கு மேல் பணி செய்து உள்ளீர்கள்.

அடுத்த கட்டங்களில் இப்பகுதிகளில் மூடு போன்ற நிலையில் உள்ள பாடசாலைகளை மூடாமல் செய்ய என்ன வழி? அத்துடன் மருத்துவ உதவி, சமூகத்திற்கான அவசியதேவைக்குரிய உதவி என அனைத்தையும் பகுதி பகுதிகளாக பிரித்து வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு எதை செய்ய விருப் பமோ அவர்கள் அதை அபிவிருத்தி செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்த அறக்கட்டளைகள் பல பேணுவாரற்று கைவிடப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் செவ்வாய்கிழமை மடம், வெள்ளிக்கிழமை மடம், அன்ன சத்திர மடம் மற்றும் கீரிமலையில் இருந்த மடம் ஒன்றுக்கும் கோடிக்கணக்கில் அறக்கட்டளையில் பணம் இருந்தது. இப்பொழுது அந்தப் பணம் எங்கே என்று தெரியாது.

சைவ பரிபாலன சபை வெளியிடும் இந்து சாதனம் எனும் பத்திரிகையில் அறக்கட்டளைகளின் விவரம், அதற்காக விடப்பட்ட நிலங்களின் தொகையும் அதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அது 1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்த அறக்கட்டளைகள் தொடர்பானது.

இன்று அவை இருந்த இடங்களுக்கு தெரியாது, மடங்கலும் இல்லை. அவ்வாறாக அதைத் தேடிப் பார்த்தால் அதில் கொத்து ரொட்டி கடைகள் உள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு வந்த ஆபத்து அறத்தை சரியாக பேணாத காரணத்தால் கர்ம வினைகளை அனுபவிக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் இருப்பாலைச் சந்தியிலிருந்த செவ்வாய்க்கிழமை மடத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அன்னதானம் இடம்பெறும்.

ஆகவே அறக்கட்டளைகள் நீண்ட ஆயுளோடு இருக்க சிறந்த வாய்ப்புகளை உருவாக்கவேண்டும்.

23 வருடங்களாக சிவபூமி அறக்கட்டளை, இரண்டு பாடசாலை, இரண்டு முதியோர் இல்லம் மற்றும் ஆசிரமங்கள் ஐந்து போன்றவற்றை நடத்தி வருகின்றோம். புலம்பெயர் சமூகமானது இவ்வாறான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

உரும்பிராய் இந்து கல்லூரியை பாதுகாக்கவேண்டும். ஏனெனில் அது வரலாறு படைத்த பாடசாலை. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் கணேசலிங்கம் இறப்பதற்கு முன் அதனை எவ்வாறு ஆயினும் காப்பாற்ற வேண்டும் என என்னிடம் கூறி கவலை அடைந்தார்.

இஸ்லாமியர்களின் அறக்கட்டளையே இன்று இலங்கையில் உச்சக் கட்டத்தில் உள்ளது - என்றார். (அ)

# விமானக் கட்டுப்பாட்டாளர்கள் வெளிநாடு செல்வதால் சிக்கல்!

கொழும்பு, மார்ச் 06

விமானக் கட்டுப்பாட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால், அவர்களது சேவையைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

138 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் தேவைப்படுகின்றபோதிலும் தற்போது 80 பேர் மாத்திரமே பணிபுரிந்து வருவதாக அதன் தலைவர் திசர அமரானந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விமான நிலைய கட்டுப்பாட்டாளர்கள் என்பவர்கள் இலங்கை எல்லைக்கு வரும் அனைத்து விமானங்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைப்பவர்களாகும்.

சர்வதேச விமானங்கள் இலங்கைக்கு வரும் போது அதற்கான பெருந்தொகை டொலர்கள் செலுத்தப்படுகின்றது.

கட்டுப்பாட்டாளர்கள் இன்றி அந்த சேவையை முன்னெடுத்துச் செல்வதென்பது இலகுவான விடயமல்ல.

கடந்த வாரமும் ஒரு கட்டுப்பாட்டாளர் பணியை விட்டு விலகி வெளிநாடு சென்றார்.

இவ்வாறான நிலைமையில் இதனை இனிமேலும் இவ்வாறு நடத்தி செல்வதென தெரியவில்லை என அவர் கூறியுள்ளார்.

தற்போதுள்ள பிரச்னைக்கு தீர்வு காணப்படாவிட்டால், இலங்கை தனது சேவைகளின் மூலம் டொலர் வருமானத்தையும் இழக்க நேரிடும்.

தெற்காசியாவிலேயே சிறந்த விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சேவையை இலங்கை வழங்குவதாகவும் அதனைப் பாதுகாக்க அதிகாரிகள் தலையிட வேண்டும்-என்றார்.

# நாணய நிதியத்தின் பிணையெடுப்பு நாட்டின் வளர்ச்சிக்கு போதுமானதல்ல!

## சுட்டிக்காட்டுகின்றார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, மார்ச் 06

**சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பு இலங்கைக்கு தற்போது அவசியமானதாக இருந்தாலும், உண்மையில் அது தேசத்தின் வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

இது தொடர்பிலான கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய சவாலானது வளர்ச்சியை உருவாக்குவதாகும்.

இந்நிலையில் தேவைகள் மோசமடைந்து வரும் நிலையில், இழக்கப்படும் தொழில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

எனவே தேவையான வளர்ச்சியை உருவாக்க, உள்நாட்டில் இயங்கும் வர்த்தகம் அல்லாத வளர்ச்சி இனி போதுமானதாக இருக்காது.

இதற்காக சுவர்களை தகர்த்து உலகிற்கு பாலங்கள் கட்டவேண்டும்.

இந்த நிலையில் சீர்திருத்தங்கள் இல்லாமல் உள்நாட்டு தீர்வு உள்ளது என்று மேடைகளில் கூறுவது சாத்தியமற்ற அம்சமாகும் என்றும் ஹர்ச தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வவுனியாவில் சீனிப்பாணியை தேன் எனக் கூறி விற்றவர் கைது

வவுனியா, மார்ச் 06

வவுனியாவில் சீனிப்பாணியை காய்ச்சி, அதனை தேன் என்று கூறி விற்பனை செய்த நபரை



சுகாதாரப் பிரிவினர் சுற்றிவளைத்துப் பிடித்ததோடு, அவரிடமிருந்து 41 லீற்றர் சீனிப்பாணியை கைப்பற்றினர்.

தேன் என சீனிப்பாணியை நபரொருவர் விற்பனை செய்வதாக வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொது சுகாதார பரிசோதகர்கள் காத்தான்கோட்டம் பகுதியிலுள்ள வீடொன்றை சுற்றிவளைத்தனர்.

இதன்போது அந்த வீட்டில் விற்பனைக்கு தயாரான நிலையில் மொத்தமாக 41 லீற்றர் சீனிப்பாணி நிரப்பப் பட்ட 55 போத்தல்களையும், சீனிப்பாணி காய்ச்ச பயன்படுத் தப்பட்ட பொருட்களையும் சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்தே சீனிப்பாணி விற்பனை செய்த நபரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 10ஆம் திகதி வரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# கிளிநொச்சி கால்நடைகளுக்கு பெரியம்மை நோய்த் தாக்கம்!



கிளிநொச்சி, மார்ச் 06

கிளிநொச்சி - பூநகரி, கரைச்சி, இயக்கச்சி, பளை, உருத்திரபுரம் மற்றும் நீவில் ஆகிய பகுதிகளில் பெரியம்மை (இலம்பி) நோய் அதிகளவில் கால்நடைகளிடையே தாக்கம் செலுத்தி வந்துள்ளது என கால் நடைப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இள வயதுடைய கால்நடை உயிரினங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

கால்நடைகளின் உடலில் பாரிய கொப்பளங்கள் ஏற்பட்டு, அவை பெரும் புண்ணாக மாறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறக்கின்ற நிலைமை காணப்படுவதாகவும், பால் உற்பத்தியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவியை துஷ்பிரயோகம் செய்த அதிபர் கைதாகினார்!

கொழும்பு, மார்ச் 06

பலாங்கொடை பின்னவல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் வீட்டுக்கு அருகில் வசிக்கும் 11 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாகவும், சிறுமி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மாத்திரைகள் தட்டுப்பாடில்லை

கொழும்பு, மார்ச் 06

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என அரச குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

இரண்டு மாதங்களுக்கு தேவையான அளவில் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் தேவையான அளவு உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# காட்டுக்குள் சுற்றுலா சென்றவர் மர்ம மரணம்!

கொழும்பு, மார்ச் 06

நுவரகல வனப்பகுதிக்குள் 7 பேருடன் நுழைந்த 34 வயதுடைய நபர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

உல்லாசப் பயணம் மேற்கொண்ட எட்டு பேர் கொண்ட குழுவொன்று கடந்த வெள்ளிக்கிழமை காட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இருப்பினும், இரவைக் கழித்த பின்னர், நபர்களில் ஒருவர் காணாமல் போனார்.

பின்னர் காணாமல்போனது குறித்து அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அந்த குழுவினர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

மஹாஓயா காவற்துறையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை அடுத்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 34 வயதுடைய உஹன பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

மஹாஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கணவருடன் முரண்பட்டு 1 1/2 வயது மகளை இறால் தொட்டிக்குள் தள்ளிவிட்டார் தாயார்!

கொழும்பு, மார்ச் 06

கணவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் காரணமாக, தாயொருவர் தனது ஒன்றரை வயதுக் குழந்தையை இறால் தொட்டிக்குள் வீசியதாக உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

உடப்பு, கட்டகடுவ பிரதேசத்தில் உள்ள இறால் பண்ணையில் பணிபுரியும் தொழிலாளி ஒருவரின் மனைவியே பெண் குழந்தையை இறால் தொட்டிக்குள் தள்ளிவிட்டார் எனக் கூறப்படுகிறது.

குறித்த பெண் குழந்தையை இறால் தொட்டிக்கு அருகில் கொண்டு வந்து தொட்டிக்குள் தள்ளியது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இறால் தொட்டிக்குள் தள்ளிவிட்டு குழந்தையை காணவில்லை எனக் கூறி தேடியபோது, அதே இறால் பண்ணையில் பணி புரியும் மற்றொரு தொழிலாளி, குழந்தை இறால் தொட்டியில் போராடுவதைப் பார்த்து அதில் குதித்து காப்பாற்றினார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்திக்கே தேர்தல் அவசியமானது!



## ஜே.சி.அலவத்துவல எம்.பி

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பாரிய வெற்றியை பெறும் என்பதால் ஐக்கிய மக்கள் சக்திக்கே தேர்தல் என்பது அவசியமாகியுள்ளது என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமானது உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கே தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

சில கட்சிகள் தேர்தலை நடத்தமால் இருப்பதற்கே விரும்புகின்றன.

பொதுவெளியில் தேர்தல் அவசியம் என்று குறித்த கட்சிகள் கூறினாலும் தேர்தலை ஒத்திவைப்பதற்கே அந்தக் கட்சிகள் மறைமுகமாக விரும்புகின்றன.

தேர்தலை ஒத்திவைப்பதற்கே ஐக்கிய மக்கள் சக்தி விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

நாம் ஒரு விடயத்தை தெளிவாகக் கூறிக்கொள்கின்றோம்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய தேவை ஐக்கிய மக்கள் சக்திக்கே இருக்கின்றது.

தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டை அச்சடிக்க முடியாது என்று அறிவிப்பு விடுக்கப்பட்டபோது அதற்கெதிராக ஐக்கிய மக்கள் சக்தியே முதலில் வீதிக்கு இறங்கி போராடியது.

இவ்வாறான ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் நாமே தொடர்ச்சியாக போராடினோம்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தாக்கல் செய்த வழக்கில், 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அவ்வாறே பெற்றுக்கொடுக்குமாறு உயர்நீதிமன்றம் சம்பந்தப்பட்டத் தரப்பினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை பெற்றுக்கொடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக முன்னின்று செயற்பட்டது.

பிரதான எதிர்க் கட்சி என்ற முறையில் இந்தத் தேர்தலுக்கான அவசியம் எமக்கே இருக்கின்றது.

அரசாங்கத்திலுள்ள கட்சிகளான பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி என்பன தேர்தல் ஒன்று இடம்பெற்றால் நிச்சியம் தோல்வியை தழுவ நேரிடும் என்பதை அறிந்து கொண்டதன் காரணமாகவே தேர்தலை எதிர்கொள்வதற்கு பின் வாங்குகின்றனர்.

அதேபோன்றே ஏனைய கட்சிகளும். விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை மக்களை கொழும்புக்கு அழைத்து வந்து யாரை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர் என்றே நான் அந்தக் கட்சிகளிடம் கேட்கின்றேன்"-என்றார். (அ)

# மகிந்தவுக்கு கேக் ஊட்டிய கதையில் உண்மையில்லை!

## கூறுகின்றார் அத்தநாயக்க

கொழும்பு, மார்ச் 06

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கேக் ஊட்டிவிட்டதாகக் கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு சந்தித்தமை தொடர்பில் வெவ்வேறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போது, இந்த சந்திப்பு குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், "பௌத்த ஆச்சிரமம் ஒன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு எனக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

அழைப்பை ஏற்று இருவரும் ஆச்சிரமத்துக்குச் சென்றோம். ஆச்சிரமத்தில் சந்தித்துக்கொண்டோம். அன்றைய தினம் தேரர் ஒருவரின் பிறந்த தினம் என்பதால் கேக் வெட்டப்பட்டது. அந்த கேக்கை நானும் உண்ணவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ரபஜபக்ஷவும் உண்ணவில்லை.

எனினும் நாங்கள் இருவரும் கேக் பரிமாறி கொண்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அதில் எவ்வித உண்மையும் இல்லை.

அத்துடன் குறித்த ஆச்சிரமத்தில் முன்னெடுக்கப்படும் நலத்திட்டங்கள் குறித்து நாம் பார்க்க வேண்டும். அதனை நாம் வரவேற்க வேண்டும்.

எனினும் அந்த இடத்தில் நானும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் சந்தித்துக்கொண்டோம் என்பதை பூதாகரமாக்கி அரசியல் ரீதியான வதந்திகளை பரப்புவதற்கே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசியல் ரீதியலான கருத்துக்களை பரப்பும் வகையில் அங்கு ஒன்றும் இடம்பெறவில்லை.

ஆகம நிகழ்வுகள், மத வழிபாடுகள், திருமண வீடுகள், மரண வீடுகளில் அரசியல் தலைவர்கள் சந்திக்கொள்வது வழமையான ஒன்றே"-என்றார். (அ)

# மரக்கறி லொறி விபத்து 14 பேருக்கு படுகாயம்!

கொழும்பு, மார்ச் 06

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லபுக்கலை பகுதிக்கு மரக்கறி ஏற்றச் சென்ற லொறி கொண்டக்கலை பகுதியில் பாரிய பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் 14 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் அவர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் ஐவர் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார் .

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் இருந்து லபுக்கலை பகுதிக்கு மரக்கறி வகைகளை ஏற்றச்சென்ற லொறி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சுமார் 70 அடி பள்ளத்தில் வீழ்ந்ததாகவும் இதனைத் தொடர்ந்து லொறியில் பின் பகுதியில் அமர்ந்து பயணித்தோர் அதிலிருந்து தூக்கி வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## இலங்கையில் நல்லிணக்கம்

# தென்னாபிரிக்க அமைச்சருடன் அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு

கொழும்பு, மார்ச் 06

இலங்கையில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தினை முன்னெடுப்பது குறித்து தென்னாபிரிக்காவின் அனுபவங்களை பகிர்ந்துகொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இடம்பெறும் ரைசினா உரையாடலின் எட்டாவது பதிப்பில் கலந்துகொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் நலெடி பண்டோவுடன் சந்திப்பொன்றில் பங்கேற்றபோதே மேற்படி விடயம் சம்பந்தமாக பேசப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சர் அலி சப்ரி தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்காவில் கடந்த காலங்களில் இனங்களுக்கு இடையில் காணப்பட்ட முரண்பாடுகள் களையப்பட்டு அங்கு நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறி முறையை ஒத்தவாறாக இலங்கையிலும் கட்டமைப்பொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் நாம் கரிசனைகளை கொண்டுள்ளோம்.

குறித்த சந்திப்பின்போது உள்நாட்டில் நல்லிணக்கப் பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது பற்றிய தென்னாபிரிக்காவின் கடந்த கால அனுபவங்கள் தொடர்பில் பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அவர் வெளியிட்டுள்ள விடயங்களையும் உள்ளடக்கியதாக எமது செயற்பாடுகளை அடுத்துவரும் காலத்தில் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள் அர்த்தமுள்ளவையாக அமைவதற்கு தென்னாபிரிக்காவின் அனுபவம் எமக்கு கைகொடுக்கும்-என்றார். (அ)

# தெற்காசிய பிராந்திய வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து நிகழ்நிலை அருங்காட்சியகம்!

## உருவாக்கும் முயற்சியில் சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, மார்ச் 06

இலங்கை உள்ளடங்கலாக தெற்காசியப்பிராந்தியத்தில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களை உள்ளடக்கிய நிகழ்நிலை அருங்காட்சியகமொன்றை உருவாக்குவதை முன்னிறுத்தி சர்வதேச மன்னிப்புச்சபை செயற்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும், அதற்கு முன்னரான இனக்கலவரங்களின்போதும் பெருமளவானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச கட்டமைப்புக்கள் மற்றும் உள்நாட்டில் நிறுவப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறும், நீதியை நிலைநாட்டுமாறும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தெற்காசியப் பிராந்திய நாடுகளில் இவ்விவகாரம் தொடர்பில் பணியாற்றி வரும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து, இயலுமானவரையில் தெற்காசியப் பிராந்தியத்தில் இடம்பெற்ற அனைத்து வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களையும் உள்ளடக்கிய நிகழ்நிலை அருங்காட்சியகமொன்றை உருவாக்குவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை திட்டமிட்டுள்ளது.

இச்செயற்திட்டத்திற்கான ஒத்துழைப்பை வழங்க முன்வருமாறு இலங்கையைத் தளமாகக்கொண்டியங்கும் சில அரச சார்பற்ற அமைப்புக்களிடம் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

# ஒருவருட உக்ரைன் போர் சாதித்தது என்ன?



உக்ரைன் மீதான ரஷ்யாவின் படை நடவடிக்கை ஆரம்பித்து கடந்த மாதம் (24) ஒரு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. முதலில் உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்குமான மோதல் என நம்பப்பட்ட போர் நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்குமான போர் என உலகம் பின்னர் மெல்ல மெல்ல தெரிந்து கொண்டது.

உக்ரைனில் தமது ஆயுதங்களை குவித்து ரஷ்யாவின் படை பலத்தை அழித்துவிடுவது ஒருபுறம் இருக்க உலக நாடுகளில் ரஷ்யா மீதான தடைகளை கொண்டுவந்து அதன் பொருளாதாரத்தை முடக்குவதனையும் மேற்குலகம் தீவிரமாக செய்தது. தற்போது இந்த பூமிப்பந்தில் உள்ள நாடுகளில் அதிக பொருளாதார தடைகளை கொண்ட நாடாக ரஷ்யா உள்ளது.

முதலில் சிறு ஆயுதங்களை வழங்குவது என தீர்மானித்த மேற்குலகம் அதன் பின்னர் உக்கிரைனின் நிலை அறிந்து அதனை தக்கவைப்பதற்காக 150 கி.மீ தூரவீச்சுக் கொண்ட ஏவுகணைகள் மற்றும் டாங்கிகளை கொடுக்கும் நிலைக்கு வந்துள்ளதுடன், ரஷ்யாவின் கோபத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

எனவே தான் 2010 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட அணுவாயுதக் குறைப்பு உடன்பாட்டில் இருந்தும் ரஷ்யா வெளியேறியுள்ளது.

களமுனையை பொறுத்தவரையில் ரஷ்யா தனது படை நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்றான டொன்பாஸ் பிரதேசத்தை கைப்பற்றி அதனை தன்னுடன் இணைந்துள்ளது. உக்ரைனின் ஆயுதங்களை களைவது என்ற அதன் நோக்கத்திலும் கணிசமான தூரம் முன்நகர்ந்துள்ளதாகவே காணப்படுகின்றது. அதாவது உக்ரைனின் கடற்படை முற்றாக அழிவடைந்துள்ளது.

போர் ஆரம்பிக்கும்போது 297 தாக்குதல் விமானங்களை கொண்ட உலகின் வான்படை பலத்தில் 31 ஆவதாக விளங்கிய உக்ரைனிடம் தற்போது விமானங்கள் இல்லை போலந்து உட்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா தயாரிப்பான மிக்-29 மற்றும் எஸ்யூ-24 போன்ற விமானங்களை பகுதிகளாக பிரித்து வழங்கியபோதும் அவைக்கு என்ன நடந்தது என்பதும் யாருக்கும் தெரியவில்லை.

மேற்குலக நாடுகளிடம் விமானங்களை தருமாறு மன்றாடுகின்றது. ஆனால் ரஷ்ய தயாரிப்பு விமானங்கள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் தமது விமானங்களை வழங்கி அவை போர்க்களத்தில் வீழ்த்தப்படுமானால் மேற்குலகத்தின் விம்பம் தகர்ந்துவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு.

போர் ஆரம்பித்தபோது 700 இற்கு மேற்பட்ட டாங்கிகள் மற்றும் பல ஆயிரம் கவசவாகனங்களை கொண்ட ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய படையினருக்கு கடந்த ஒரு வருடமாக போலந்தின் ஊடாக அண்டைய மேற்குலக சார்பு நாடுகள் 440 டாங்கிகளையும், 1,510 கவசவாகனங்களையும் வழங்கியபோதும் அவற்றிற்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது. ஏனெனில் தற்போது லெப்பார்ட் வகை டாங்கிகள் வேண்டும் இல்லை தோல்வியை தழுவிவிடுவோம் என சொல்கின்றது உக்ரைன்.

நிதி உதவிகளை பொறுத்தவரையில் ஆயுத உதவியாக அமெரிக்கா 32 பில்லியன் டொலர்களை இதுவரையில் வழங்கியுள்ளது. ஏனைய நாடுகள் வழங்கிய உதவிகளையும் பார்த்தால் 115 பில்லியன் டொலர்கள். இலங்கையின் ஒருவருட வரவுசெலவுத்திட்ட தொகையை விட  அதிகம்.

உக்ரைனிடம் இருந்த பல நூறு ஆட்டிலறி பிரங்கிகள் மற்றும் வான் எதிர்ப்பு ஏவுகணைகளை விட மேற்குலகம் 1,170 வான் எதிர்ப்பு ஏவுகணைகளையும், 655 ஆட்டிலறி பிரங்கிகளையும் வழங்கியுள்ளதுடன் 2 மில்லியன் எறிகணைகளையும் வழங்கியுள்ளன. ஆனாலும் அவர்களின் எறிகணைகள் இன்னும் சில மாதங்களுக்கே போதுமானது என்கிறது உக்ரைன். மேற்குலகத்திடம் மேலும் வழங்குவதற்கு ஆயுதங்கள் இல்லை. அவர்களின் உற்பத்தி வேகத்தை விட உக்ரைன் படையினர் பயன்படுத்தும் வேகம் அதிகமாம்.

எறிகணைகளை குறிபார்த்து வீசுமாறு கூறுகின்றது பிரித்தானியா, இஸ்ரேலின் கையிருப்பில் இருக்கும் 250,000 எறிகணைகளை வாங்க முற்பட்டுள்ளது அமெரிக்கா. அதாவது நேட்டோ படையினர் தமது ஆயுதங்களை இழந்து வருகின்றதாகவே புலப்படுகின்றது. எனவே தான் இந்த சமரை ரஷ்யா விரைவில் முடிக்க விரும்பவில்லை. உக்ரைனுக்கு செல்லும் மேற்குலக தலைவர்களையும் அது அனுமதிக்கின்றது. செலன்ஸ்கிக்கும் உயிர் உத்தரவாதம் வழங்கியுள்ளதாக இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை பொறுத்தவரையில் மேற்குலகம் மேற்கொண்ட தடைகள் ரஷ்யாவை பாதித்தாலும் அது இவர்கள் எதிர்பார்த்தது போல பெரிதான பாதிப்புக்களை ஏற்படுத்தவில்லை.

ரஷ்யாவின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டு 6 விகிதம் வீழ்ச்சி காணும் என அனைத்துலக நாணய நிதியம் கடந்த ஜூலை மாதம் தெரிவித்த போதும் அது 2.1 விகிதமே சுருங்கியுள்ளது. மேலும் இந்த வருடம் அது வளர்ச்சி காணும் எனவும், 2024 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியை விட ரஷ்யாவின் வளர்ச்சி அதிகமாகும் எனவும் நாயணநிதியம் தனது கணிப்பை வெளியிட்டுள்ளது.

மாறாக ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த மக்கள் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இந்த போரினால் ஜேர்மனிக்கு ஏற்பட்ட பொருளாதார இழயயயப்பு 200 பில்லியன் டொலர்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளை இங்கு கூறத்தேவையில்லை. பிரித்தானியாவின் பொருளாதாரம் பூச்சியத்திற்கு கீழ் சென்றுள்ளது.

பணவீக்கம், உணவுத்தட்டுப்பாடு என உலகில் 25 இற்கு மேற்பட்ட நாடுகள் முற்றான பொருளாதார வீழ்ச்சியையும் ஏனைய நாடுகள் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் நிலையை இந்த போர் கடந்த 12 மாதங்களில் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது ரஷ்யாவின் மலிவான எரிபொருளும், சீனாவின் உற்பத்தி பொருட்களும் இன்றி ஐரோப்பிய நாடுகள் தப்பி பிழைப்பது கடினமானது என்பதை அந்த மக்கள் மெல்ல மெல்ல உணரத் தலைப்பட்டுள்ளனர். எனவே தான் பல ஐரோப்பிய நாடுகளில் மக்கள் போராட்டங்கள் முனைப்பு பெறுகின்றன. பாடசாலைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் முடக்கப்படுகின்றன. உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

படைத்துறை இழப்புக்களை பொறுத்தவரையில் ரஷ்யா ஏறத்தாள 18,000 படையினரையும் உக்ரைன் 250000 தொடக்கம் 300000 படையின ரையும் இழந்துள்ளனர். ரஷ்யாவின் ஆயுத இழப்புக்கள் கணிசமான போதும் அவர்கள் அதனை இலகுவாக மாற்றீடு செய்துவிடுவதும் போரில் உக்ரைனினால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாதுள்ளது.

மேலும் நவீன ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் பயன்பாடும் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்ட களமுனையாக உக்ரைன் களமுனை யுள்ளது. ரஷ்யா தனது மொஸ்கோவா என்ற தாக்குதல் கப்பலையும் இந்த சமரில் இழந்துள்ளதுடன், இதுவரையில் எஸ்-400 போன்ற அதி நவீன ஏவுகணைகளையும், கைப்பர் சொனிக் ஏவுகணைகளையும் ஒரு தடவை தான் பரீட்சிர்த்து பார்த்துள்ளது.

அதாவது அவர்கள் மிகப்பெரும் எதிரிக்காக பல ஆயுதங்களை சேமித்து வைத்துள்ளனர் என்பதற்கு அப்பால் அதி நவீன ஆயுதங்களையும், அணுக்குண்டுகளையும் அதிகம் தயாரிக்கப் போகின்றனர் என்பதையே ஆணுவாயுதக் குறைப்பு உடன்பாட்டில் இருந்து வெளியேறிய சம்பவம் காண்பிக்கின்றது.

அதாவது ஒரு வருடம் நிறைவடைந்தபோதும் இந்த போர் இன்னமும் ஒரு திருப்புமுனையை அடையவில்லை என்பது தான் உண்மை. அதனை அடையும்போது உலகம் ஒரு மூன்றாவது உலகப்போரினுள் தான்னை அறியாமலே சென்றிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

எனவே தான் ஒரு வருட நிறைவில் போரை நிறைவுக்கு கொண்டுவர சீனா ஒரு முயற்சியை எடுத்துள்ளது. ஆனால் எதிர்பார்த்தது போல சீனாவை நம்ப முடியாது என நேட்டோ அதனை நிராகரித்துள்ளது.

அதேசமயம் 500 தாய்வான் படையினருக்கு நவீன போர் பயிற்சிகளை வழங்கவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. பிளட்டூன் மற்றும் கொம்பனி அளவுடைய படையினருக்கு இதுவரையில் பயிற்சிகளை வழங்கிய அமெரிக்கா தற்போது பற்றலியன் அளவுள்ள படையினருக்கு பயிற்சிகளை வழங்குவது என்பது உக்ரைன் போர் உலகில் விஸ்தரிக்கப்போகின்றது என்பதற்கான அறிகுறியே.

மேலும் ஈரானின் அணுவாயுத திட்டம் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போரின் ஒரு வருட நிறைவுக்கு அண்மையாக அமெரிக்க அதிபரும், ரஷ்ய அதிபரும் கடுமையான எச்சரிக்கைகளை ஒருவருக்கு ஒருவர் விடுத்துள்ளதும் இந்த போர் விரைவில் முடியும் என்ற நம்பிக்கைகளை சிதறடித்தள்ளது. ஆனால் அதனால் தற்போது உலகில் எற்பட்டுள்ள வறுமை, பசி, பட்டினி மற்றும் பொருளாதார வீழ்ச்சிகள் என்பன மேலும் அதிகமாகும் என்பதுடன் பல நூறு மில்லியன் மக்கள் மிகப்பெரும் துன்பத்தையும் அனுபவிக்கப்போகின்றனர் என்பது தான் யதார்த்தம்.





# அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாய் மதிப்பின் திடீர் உயர்வு பொருளாதாரத்துக்கு சாதகமாக அமையுமா?

ரஞ்சன் அருண் பிரசாத்

பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள இலங்கை, பொருளாதார ரீதியில் இன்று படிப்படியாக முன்னேற்றத்தை கண்டு வருவதாக கூறப் படுகின்ற நிலையில், அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந் துள்ளதை இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் ஊடாக அவதானிக்க முடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ ஆட்சி பீடம் ஏறும் போது, அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 177 ரூபாவில் காணப்பட்டது.

2022ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி, அதாவது சரியாக ஒரு வருடத்திற்கு முன்பாக அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 201 ரூபா 89 சதமாக காணப்பட்டது.

இந்த நிலையில், இலங்கை ரூபாவின் பெறுமதி 2022ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பின்னரான காலத்தில் பாரிய சரிவை சந்தித்திருந்தது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 202 ரூபா 09 சதமாக காணப்பட, அடுத்த நாள் 229 ரூபா 50 சதம் வரை சடுதியாக வலுவிழந்தது.

இந்த பெறுமதி வலுவிழப்பானது, தொடர்ந்தும் பல மடங்குகளாக வலுவிழந்தது, இலங்கை பொருளா தாரத்தை பாரிய சவாலுக்கு உட்படுத்தியிருந்தது.

குறிப்பாக 2022ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி முதல் 11ம் தேதி வரையான காலத்திற்குள் அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 364 ரூபா 76 சதமாக பதிவாகியிருந்ததாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் அறிவிப்பின் பிரகாரம், 364 ரூபா 76 சதமாக நிர்ணயிக்கப்பட்ட அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி, தனியார் முகவர் நிலையங்கள் மற்றும் கருப்பு சந்தையின் ஊடாக சுமார் 410 ரூபா வரை சென்றிருந்தது.

2019ம் ஆண்டிற்கும், 2022ம் ஆண்டிற்கும் இடையிலான காலப் பகுதியில் அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 187 ரூபா வரை வலுவிழந்திருந்தது. இது இலங்கையின் பொருளா தாரத்தில் பாரிய தாக்கத்தை செலுத்தியிருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் வசம், டாலர் கையிருப்பு பாரியளவில் குறைவடைந்ததை அடுத்து, நாடு பாரியதொரு தாக்கத்தை எதிர்நோக்கியிருந்தது.

**டாலர் கையிருப்பு குறைய காரணம் என்ன?**

இலங்கையின் எதிர்நோக்கிய ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட் பெருந்தொற்று ஆகிய காரணங்கள் இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல பிரதான காரணங்களாக அமைந்திருந்தது.


எனினும், சுதந்திர இலங்கையின் முறையற்ற பொருளாதார கொள்கைகள் இந்த வீழ்ச்சிக்கு வழிவகுத்ததாக மக்கள் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றார்கள்.

சுற்றுலாத்துறை, ஆடை, தேயிலை, ரப்பர் ஏற்றுமதி உள்ளிட்ட துறைகளின் ஊடாக இலங்கை தமக்கான வருமானத்தை பெரிதும் நம்பியிருந்தது.

எனினும், ஈஸ்டர் தாக்குதல் இலங்கையின் பொரு ளாதாரத்தை வீழ்ச்சி பாதைக்கு கொண்டு சென்றது.

ஈஸ்டர் தாக்குதல் காரணமாக, சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.






ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 166,975 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்த போதிலும், அடுத்த மாதம் அந்த தொகையானது 37,802ஆக வீழ்ச்சி கண்டிருந்தது.

அதையடுத்து, 2020ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பின்னரான காலத்தில் கோவிட் பெருந்தொற்று காரணமாக நாடு முழுமையாக முடக்கப்பட்டது.

2020ம் ஆண்டு மார்ச் மாதம் 71,370 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்த நிலையில், அந்த மாதம் கோவிட் தொற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக முடக்க நிலை அறிவிக்கப்பட் டது.

இதையடுத்து, ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் இலங்கைக்கு ஒரு சுற்றுலாப் பயணி கூட வருகைத் தரவில்லை. எனினும், டிசம்பர் மாதம் 393 சுற்றுலா பயணிகள் வருகை தந்திருந்தார்கள்.

2019ம் ஆண்டு முழுமையாக 19 லட்சத்து 13 ஆயிரத்து 702 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்த நிலையில், 2020ம் ஆண்டு மொத்தமாகவே 5 லட்சத்து 7 ஆயிரத்து 704 சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே வரு கைத் தந்திருந்தார்கள்.

2021ம் ஆண்டு அந்த தொகையானது ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 495ஆக குறைவடைந்தது.

இதனால், இலங்கைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் முழுமையாக இழக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு தமது வருமானத்தை இழந்து இலங்கை, கையிருப்பிலிருந்த டாலர் உள்ளிட்ட சொத்துக்களை யும் இழந்தது. இது பாரிய பொருளாதார நெருக்கடிக்கு வழி வகுத்தது. எனினும், இன்று சுற்றுலாத்துறையில் சாதகமான முன்னேற்றத்தை காணக்கூடியதாக உள்ளது.

2023ம் ஆண்டின் கடந்த இரு மாத காலப் பகுதியில் மாத்திரம் 210,184 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதுடன், சுற்றுலாத்துறையின் ஊடாக ஜனவரி மாதத்தில் மாத்திரம் 162 மில்லியன் அமெரிக்க டாலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, மின்சார வெட்டு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு என பல்வேறு சவால் களை சந்தித்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக இலங்கை யில் போராட்டங்கள் வெடித்தன.

போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத அப்போ தைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, நாட்டை விட்டு தப்பிச் சென்று, தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார். இதையடுத்து, நாட்டின் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டார்.

புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரம சிங்க, சர்வதேச தொடர்புகள் மற்றும் புதிய கொள்கைகளின் ஊடாக அந்நிய வெளிநாட்டு நாணயங்களின் கையிருப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டார்.

இறக்குமதி கட்டுப்பாடுகள், சர்வதேச நிறுவனங்களி டமிருந்து கடனுதவிகள், சுற்றுலாத்துறை மேம்படுத் தல், சர்வதேசத்திற்கு வழங்க வேண்டிய கடன்களை வழங்குவதை நிறுத்தி வைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி எப்படி சடுதியாக அதிகரித்தது?**

இலங்கை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை குறுகிய காலத்திற்கு செலுத்தாதிருக் கின்றமை, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்தமை, இறக்குமதி கட்டுப்பாடுகள், ஏற்றுமதி வருமானம் சற்று அதிகரித்துள்ளமை, வெளிநாட்டு பணியாளர்களின் வருமானத்தின் வருகை அதிகரித்துள் ளமை மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற உதவித் திட்டம் ஆகியவற்றினால் கிடைக்கப் பெற்ற டாலரினால் நாட்டின் கையிருப்பு அதிகரித்துள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் எம். கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்கு உதவி வழங்கும் வகையில், 400 மில்லியன் டாலரை வழங்க உலக வங்கியின் முதலீட்டு பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பானது சந்தையில் ஒரு முன்னேற்றகர மான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பேராசிரியர் கூறுகின்றார்.

“முக்கியமான காரணம், 400 மில்லியன் டாலரை, இலங்கையிலுள்ள 3 வங்கிகளின் ஊடாக வழங்கவுள்ள தாக உலக வங்கி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. உதவியாக வழங்கப்படும் இந்த தொகையை இறக்குமதி களுக்காக பயன்படுத்த முடியும் என்ற ஒரு அறிவிப்பு வந்துள்ளது. என்னை பொறுத்த வரையில், ஏற்றுமதி யில் கிடைத்த அதிகரிப்பு என்றும் நான் சொல்ல மாட்டேன். அந்நிய செலாவணி வந்தமைக்கான அதிகரிப்பு என்று சொல்வதையும் நம்பமாட்டேன். உலக வங்கி உதவி தொகையை வழங்குவதாக கூறியுள் ளது. இந்த அறிவிப்பானது, சந்தையில் ஒரு சாதகமான மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. சந்தையில் நம்பகத்தன்மையை அதிகரித்துள்ளது. அதனாலேயே ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.” என பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி குறிப்பிடுகின்றார்.



இந்த ரூபாவின் பெறுமதி அதிகரிப்பை சாதகமாக பார்க்க முடியுமா? என பேராசிரியர் எம்.கணேஷ மூர்த்தியிடம் வினவியபோது,

“பார்க்கலாம். ஆனால், இது தற்காலிகமானது. வழக்கமான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் செல்லுமாக இருந்தால், இது அனைத்தும் ஆவியாகி விடும். ஏனென்றால், இலங்கை இப்போது கடனை திருப்பி செலுத்தவில்லை. இறக்குமதிகளை மிகவும் கட்டுப்படுத்தி வைத்துள்ளார்கள். அதனால் தான், ரூபாவின் பெறுமதி அதிகரிப்பதை போன்று காட்டு கின்றதே தவிர, பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு, ரூபாவின் பெறுமதி அதிகரிக்க வில்லை. இன்னுமொரு காரணம் இருக்கின் றது. இதுவரை காலமும் பணத்தை அரசாங் கம் அச்சிட்டது. ரூபாவின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, டாலருக்கான கேள்வி அதிகரிக்கும். ரூபாவின் நிரம்பல் அதிகரிக் கின்றது, அவ்வாறான நிலையில் டாலர் வரவில்லை என்றால், டாலரின் பெறுமதி அதிகரிக்கும். இப்போது ரூபா அச்சிடப்படுவதில்லை. ரூபா அச்சிடாமையினால், ரூபாவின் நிரம்பல் குறையும் அல்லவா?. டாலரின் பெறுமதி குறைவடைவதற்கு அதுவும் ஒரு காரணமாக அமைகின்றது.” என அவர் கூறுகின்றார்.

அவ்வாறாயின், நாடு உண்மையாகவே பொருளா தாரத்திலிருந்து மீளவில்லையா என அவரிடம் கேள்வி எழுப்பியபோது,

“நிச்சயமாக இல்லை. இதுபோலியாக உருவாக்கப் பட்ட ஒரு நிலைமை. இதனை ஒரு சாதகமான நிலைமை யாக பார்க்க முடியாது. இதுவொரு தற்காலிகமான நிலைமை. இலங்கையின் நிலைமைகள் வழமையான நிலைக்கு திரும்புகின்ற போது, சில மாற்றங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. உலக வங்கியினால் வழங்கப்பட்ட இந்த உதவியானது, ஒரு முறை மாத்தி ரமே வழங்கப்படும். இந்த பணம் பயன்படுத்தப்பட்ட தன் பின்னர், மீண்டும் பழைய நிலைக்கு செல்வதற்கான சாத்தியம் உள்ளது.” என அவர் தெரிவிக்கின்றார்.

இந்த காலப் பகுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டாலர் கடனுதவி கிடைக்கும் பட்சத்தில், இன்று காணப்படுகின்ற நிலைமையையே தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சாத்தியம் உள்ள தாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

# 80,720 வேட்பாளர்களின் கட்டுப்பணமாக 18 கோடி 60 லட்சம் ரூபா அரச கணக்கில்!

கொழும்பு, மார்ச் 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 80,720 வேட்பாளர்களின் கட்டுப்பணமாக பெறப்பட்ட 18 கோடியே 60 லட்சம் ரூபாய் அரசாங்கக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த தேர்தல் ஆணைக் குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர், திறைசேரியில் பணம் இல்லாத காரணத்தினால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் கையளிக்கப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்து செய்யாவிட்டால், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுக்கு பிணை பணத்தை செலுத்த முடியாதென அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நிலவி வரும் நிச்சயமற்ற தன்மைக்கு தீர்வு காணும் வரை பிணைத் தொகையை அரசாங்கத்தின் கணக்கில் வைக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதுவரை 58 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேச்சைக் குழுக்களுக்காக 80,720 வேட்பாளர்கள் வைப்பு செய்துள்ளனர்.(அ)

# 'தெரண' வலையமைப்பு தலைவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி?

கொழும்பு, மார்ச் 06

ஜனாதிபதித் நடைபெற்றால் 'தெரண' ஊடக வலையமைப்பின் தலைவர் திலித் ஜெயவீர போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான சிங்கள வார ஏட்டின் அரசியல் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வெள்ளிக்கிழமை 'தெரண' ஊடக வலையமைப்பின் தலைவர் திலித் ஜெயவீர அரசியலில் பிரவேசிக்கத் தயாராவதாக அரசியல் வட்டாரத்தில் ஒரு செய்தி பரவியது. அதற்காக விருந்து கூட வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான உண்மைகளை ஆராய்ந்த போது ஹரிஷ்சந்திர விஜயதுங்கவினால் தொடங்கப்பட்ட கட்சியானது, ஹேமகுமார நாணயக்காரவின் மௌபிமா ஜனதா கட்சியின் கீழ் இருந்தமை தெரியவந்துள்ளது. தற்போது அக்கட்சி திலித் ஜெயவீரவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், திலித் ஜெயவீரவுக்கு ஹேமகுமார நாணயக்கார கட்சியை விற்றுவிட்டார் என்ற வதந்தியை அக்கட்சி வட்டாரங்கள் மறுக்கின்றன. இந்த விருந்தை திலித் ஜயவீரவுக்கு நாணாயக்கார தனது தேவைக்கேற்ப வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'தெரண' தலைவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நம்பிக்கையுடன் ஏற்கனவே அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் ஒரு கதை பரவி வருகின்றது.

எனினும் இது தொடர்பாக இதுவரை அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் தெரிவிக்கப் படவில்லை. திலித் ஜெயவீரவின் நேர்காணல்களும், அவர் தலைமையிலான சமூக நலத் திட்டமான தொழில்முனைவோர் உயிர் வாழும் "அரமுன" நிகழ்ச்சியும் சமீபகால சமூக ஊடகங்களில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மருந்து வாங்க பணம் இல்லாததால் பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்த தாய்

கொழும்பு, மார்ச் 06

கெப்பிட்டிகொல்லாவ - கனுகஹவெவ பிரதேசத்தில் தாயொருவர் தனது இரண்டு அங்கவீனமான மகன்களுடன் தற்கொலை செய்யும் நோக்கத்துடன் நேற்று வீட்டின் கிணற்றில் குதித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் ஒரு மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், தாயுடன் மற்றைய மகனும் கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கெப்பிட்டிகொல்லாவ கனுக ஹவெவ பிரதேசத்தை சேர்ந்த சுனில் சாந்தகே ரவிது மிஹி ரங்க என்ற 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் 48 வயதுடைய தாயும் 9 வயது சிறுவனும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த 21 வயதுடைய இளைஞன் ஊனமுற்றவர். அவரது சகோதரர் காது கேளாதவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக தனது இரண்டு மகன்களுடன் இருக்கும் இந்த பெண்ணுக்கு இரண்டு மாற்றுத்திறனாளி மகன்களின் சிகிச்சைக்கு பணம் இல்லாத காரணத்தால் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்றதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மகள் வீட்டுக்கு சென்ற தாய் விபத்தில் சிக்கி உயிரிழப்பு!

அம்பாறை, மார்ச் 06

அம்பாறை - காரைதீவு, சண்முக வித்தியாலயத்திற்கு முன் ஓட்டோவும் உழவு இயந்திரமும் மோதியதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், ஓட்டோவில் பயணித்த மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு-ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த மீராமுகைதீன் பாத்தும்மா (வயது - 66) என அடையாளம் காணப்பட்டார்.

அக்கரைப்பற்றில் உள்ள மகளின் வீட்டுக்குச் செல்லும் வழியில் இவ் விபத்து ஏற்பட்டதில் தாய் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது அறுவடை செய்த நெல்லை ஏற்றிக்கொண்டு கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்துடன் ஆட்டோ ஒன்று மோதியதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

கல்வி tv CHANNEL-1

**06.03.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**06.03.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ரூ.1 கோடி பெறுமதியான உபகரணம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு




அம்பாறைஇ மார்ச் 06

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு கோடி 25 லட்ச ரூபா பெறுமதியான உபகரணம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க மருத்துவர் திருமதி புஷ்பலதா லோகநாதனின் விடாமுயற்சியின் பலனாக இந்த உதவி கிடைக்கப்பெற்றது.

ஜூட் மசாடோவின் மூலமாக “டி சூட்டர் மெடிக்கல் லிமிட்டெட்” மருத்துவ உபகரண உற்பத்தி செய்யும் நிறுவனத்திடமிருந்து 12.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கிடைத்தன.

வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஆர். முரளீஸ்வரனிடம் நன்கொடையாக இவை வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மருத்துவர் புஷ்பலதா லோகநாதன், கலாநிதி.நாகலிங்கம் பிரசாந்தன், எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மருத்துவர் எஸ்.வருண் பிரசாந்இ, நிர்வாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள், வைத்திய அதிகாரிகள்இ தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளிகளும் கலந்து கொண்டனர். (அ)



# சாதனை மாணவர்களுக்கு கௌரவம்

அம்பாறை, மார்ச் 06

இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சம்மேளனத் தின் ஏற்பாட்டில் 16 அணிகள் கலந்து கொண்ட சமபோஷ வெற்றிக் கிண்ணப் போட்டி யில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவர்களை கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தினால் கௌரவிக்கும் நிகழ்வு மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாடசாலை அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கல்முனை கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதி, உதவி அதிபர்கள், விளையாட்டு குழு ஆசிரியர்கள் ஆசிரியர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (அ)



இன்று திங்கட்கிழமை மாசி மஹோற்சவம். அதனையொட்டி திருக்கோவில் விநாயகபுரம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய மாசி மக அலங்கார உற்சவ நேற்றைய வேட்டை திருவிழாவில் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் வேட்டையில் ஈடுபடுவதைக் காணலாம். (அ)

# சாய்ந்தமருதில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம்

அம்பாறை, மார்ச் 06

சாய்ந்தமருதில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாமொன்று சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் எம்.ஐ.சம்சுடீன் தலைமையில் சாய்ந்தமருது சுகாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஏ. டபிள்யூ. வாஜித், ஆயுர்வேத வைத்தியப் பொறுப்பதிகாரி ஏ. எம். நபீல், சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் எஸ்.எம்.ரிஷாட், தலைமை பீட சிரேஷ்ட



சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் நியாத் ஏ. மஜீத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம். எம்.சமூன், சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வைத்திய முகாமில் 06 பேர் கொண்ட ஆயுர்வேத வைத்திய குழாம் மூலம் பொதுமக்களுக்கு வைத்திய ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்பட்டதுடன் தொற்றா நோய்கள் தொடர்பாக நோயாளிகளுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டு, மாதா மாதம் கிளினிக் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவ முகாமின் முன்பாக தலைகீழாகக் கவிழ்ந்தது கார்!

அம்பாறை, மார்ச் 06

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில், அக்கரைப்பற்று 241ஆம் இராணுவ படைப்பிரிவு முகாமின் தேனீர்ச் சாலை முன்பாக நேற்று அதிகாலை கார் ஒன்று விபத்துக்குள்ளாகியது.

கார் வீதியை விட்டு விலகி, வீதி அருகில் இருந்த சிறிய தூண்களை உடைத்துக்கொண்டு சிறிய பள்ளமான பிரதேசமொன்றில் தலைகீழாக வீழ்ந்தது.

காரின் இரு பக்க இலக்கத் தகடுகளும் காணப்படாத நிலையில், காரின் முன்பகுதி மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது. காரின் சில பாகங்கள் சிதறி கிடந்தன.

இதில் பயணம் செய்தவர்கள் தொடர்பிலான மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறாத நிலையில், அக்கரைப்பற்று போக்குவரத்து பொலிஸார், நேற்று காலை குறித்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர். (அ)




# புதையல் தோண்டிய மூன்று பேர் சிக்கினர்

திருமலை, மார்ச் 06

திருகோணமலை - கந்தளாய், 91ஆம் கட்டை ஜன சவி மாவத்தை பகுதியில் வீடொன்றில் புதையல் தோண்டிய மூவரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் கூறினர்.

அப்பகுதியில் வீடொன்றில் புதையல் தோண்டுவதாக கந்தளாய் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்ற போது வீட்டின் அடிப்பாகத்தில் 15 அடி வரை தோண்டிக் கொண்டிருந்தபோது மூவர் கைது செய்யப்பட்டனர். (அ)

# தரம் 1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



திருமலை, மார்ச் 06

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தில் 2023ஆம் ஆண்டின் புதிய முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

“மகிழ்ச்சிகரமான கட்டலுக்கான பிள்ளைகளை இனங் காணல்” எனும் கல்வி அமைச்சின் தொனிப்பொருளின் கீழ், இச் செயற்பாடு ஆரம்பமானது.

அதிபர் எம். எஸ். அகமட் ராஜீ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பிரான்ஸ் முழுக்க நாளை கறுப்பு நாள் போராட்டம்

## நாடு முழுக்க இயல்புநிலை செயலிழக்கும்



பாரிஸ், மார்ச் 06

ஓய்வூதியச் சீரமைப்புக்கு எதிரான தொழிலாளர் போராட்டங்கள் பிரான்ஸில் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கின்றன.

ஒரே நாளில் நாட்டை முற்று முழுதாகச் செயலிழக்கச் செய்து காட்டி அரசுக்கு மிரட்டல் விடுக்க பிரான்ஸின் தொழிற் சங்கங்கள் ஆயத்தமாகியுள்ளன.

சகல தொழில் துறைகளையும் சார்ந்த தொழிற் சங்கங்கள் நாளை செவ்வாய்க்கிழமை முழு நாள் வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. அன்றைய தினத்தைக் 'கறுப்பு நாள்' என்று அவை பெயரிட்டுள்ளன. அன்றைய மாபெரும் வேலை நிறுத்தம் அடுத்தவரும் நாட்களுக்கும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுபற்றி செவ்வாய்க்கிழமை மாலையில் தொழிற்சங்கங்கள் நாட்டுக்கு அறிவிக்கவுள்ளன. பாரிஸில் பொதுப் போக்குவரத்து முதல் நாளாந்தம் கழிவு அகற்றும் செயற்பாடுகள் வரை அனைத்து பணிகளும் முடக்கப்படவுள்ளன. மின் சக்தி, எரிவாயு, எரிபொருள் துறைப் பணியாளர்கள் தங்களது பணி நிறுத்தத்தை நேற்று வெள்ளிக்கிழமையே தொடக்கி விட்டனர். கல்லூரிகள், உயர் கல்லூரிகள் உட்பட சகல நிலைப் பாடசாலைகளும் செவ்வாய்க்கிழமை முற்று முழுதாக மூடப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

தொழிலாளர் போராட்டங்களை ஆதரித்து - அவர்களின் பின்னால் நின்று - ஆதரவை வழங்கி வருகின்ற மூத்த தீவிர இடது சாரித் தலைவர் ஜோன்-லூக் -மெலன்சோன் பாரிஸில் உயர்தர மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், கறுப்பு நாளில் "உங்களால் முடிந்த எல்லாவற்றையும் முடக்குங்கள்" என்று அழைப்பு விடுத்தார்.

ஓய்வூதியச் சீர்திருத்தம் 'நவதாராளவாதத்தின்' அடையாளமாகும். அதற்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றி பெற்றால், அது உலகம் முழுவதும் எதிரொலிக்கும். அந்த வெற்றி ஓய்வூதியச் சீர்திருத்தத்துக்கு மட்டுமானது அல்ல. நாம் வெற்றி கொள்ள வேண்டிய ஓர் உலகத்துக்குமானது.

நவதாராளவாத சித்தாந்தம் என்பது உலக அரசியல்-பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற அதிகார வர்க்கத்தின் ஒருவித சிந்தனைக் கட்டமைப்பு. மனிதர்களை எப்போதும் ஒரு வாடிக்கையாளர் என்ற ஒற்றைச் செயற்பாட்டுக்குள்ளேயே அது முடக்கி வைத்திருக்கின்றது.

அதிக உற்பத்திக்காக அதிக காலம் உழைத்தல் என்பது அந்த சித்தாந்தத்தின் மூடக்கொள்கை.

- இவ்வாறு மெலன்சோன் தனது உரையில் காரசாரமாகத் தாக்கியுள்ளார்.

கடந்த அதிபர் தேர்தலில் மூன்றாவது தடவையாக எலிஸே மாளிகைக்கான பந்தயத்தில் இறங்கித் தோல்வியடைந்த போதிலும் தொடர்ந்து நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சோசலிஸக் கட்சி உட்பட பிரான்ஸின் இடதுசாரிகளை ஒன்று திரட்டிப் பலமான அரசியல் சக்தியாக மாற்றியவர் மெலன்சோன். அவர் உருவாக்கிய அரசியல் கூட்டணி நாடாளுமன்றத்தில் பலம் பொருந்திய மூன்றாவது பெரும் சக்தியாக உள்ளது. மக்ரோன் அரசுக்குப் பெரும் நெருக்கடி கொடுத்து வருகிறது. (அ)




# அமெரிக்காவை தாக்கிய அதிபயங்கரப் பனிப்புயல்!

## 12 பேர் உயிரிழப்பு

நியூயோர்க், மார்ச் 06

அமெரிக்காவில் காலநிலை மாற்றத்தின் எதிரொலியால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இந்த குளிர்காலம் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் "வெடிகுண்டு சூறாவளி" என்று அழைக்கப்படும் பயங்கர பனிப்புயல் ஒட்டுமொத்த அமெரிக்காவையும் உறைய வைத்தது.

நேற்று முன்தினம் அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களை அதிபயங்கர புயல் தாக்கியுள்ளது.

கென்டக்கி, அலபாமா, கலிபோர்னியா, மிசிசிப்பி உள்ளிட்ட மாகாணங்களில் மணிக்கு 129 கி.மீ வேகத்தில் புயல் காற்று வீசியதில் நூற்றுக் கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன.

மின்கம்பங்கள் சரிந்தன. வீடுகள், கடைகள் உள்ளிட்டவற்றின் மேற்கூரைகள் பல மைல் தொலைவுக்கு தூக்கி வீசப்பட்டன.

இடைவிடாது கொட்டிய கனமழையால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்ததில் ஏராளமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள 7 மாகாணங்களில் பல முக்கிய இடங்களில் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதோடு, விமான சேவையும் முடங்கியுள்ளது.

இதனிடையே புயல் காரணமாக ஏற்பட்டுள்ள மின்தடையால் 7 மாகாணங்களில் சுமார் 14 லட்சம் மக்கள் இருளில் தவித்து வருகின்றனர்.

புயல் தொடர்பான சம்பவங்களில் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கொரோனா தடுப்பூசி கண்டறிந்த ரஷ்ய விஞ்ஞானி மர்மக் கொலை!



மொஸ்கோ, மார்ச் 06

ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பூசியை கண்டுபிடித்த குழுவில் இடம்பெற்றிருந்த அறிவியல் விஞ்ஞானி அண்டிரு நேற்று முன்தினம் அவரது வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனிடையே, கொரோனாவுக்கு எதிராக பல்வேறு தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி கொரோனாவுக்கு எதிராக நல்ல பயனை தந்தது. ரஷ்ய அரசாங்கம் ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை கண்டுபிடித்தது.

வைரஸ் குறித்த ஆராய்ச்சியாளரான அண்டிரு கொரோனா தடுப்பூசியான ஸ்புட்னிக் வி தடுப்பூசியை கண்டுபிடித்ததற்காக அவருடன் சேர்ந்து மொத்தம் 18 அறிவியல் விஞ்ஞானிகளுக்கு கடந்த 2021ஆம் ஆண்டு ரஷ்ய ஜனாதிபதி புடின் நாட்டின் உயரிய விருதை வழங்கி கௌரவித்தார்.

18 பேர் கொண்ட அந்த அறிவியல் விஞ்ஞானிகள் குழுவில் அண்டிரு பொட்டிக்வ் (வயது 47) என்ற விஞ்ஞானி இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில், ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பூசியை கண்டுபிடித்த குழுவில் இடம் பெற்றிருந்த அறிவியல் விஞ்ஞானி அண்டிரு நேற்று முன்தினம் அவரது வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.


குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் அண்டிரு பெல்ட்டால் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,

வாக்குவாதத்தின்போது அண்டிருவை பெல்ட்டால் கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு 29 வயதுடைய நபர் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இரண்டாம் கட்ட விசாரணையை பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

# உக்ரைனின் வெடிமருந்து இருப்புக்களை உயர்த்த அமெ. 400 மில்லியன் டொலர்கள் இராணுவ உதவி!



நியூயோர்க், மார்ச் 06

ரஷ்யாவுடனான அதன் தீவிரப் போரின் போது தீர்ந்துபோன உக்ரைனின் வெடிமருந்து இருப்புகளை உயர்த்துவதற்காக உக்ரைனுக்கு அமெரிக்கா 400 மில்லியன் டொலர்கள் இராணுவ உதவியை வழங்க உள்ளது.

இதில் உயர் துல்லியமான ஹிமார்ஸ் பீரங்கி ரொக்கெட்டுகள் மற்றும் ஹோவிட்சர்கள் அடங்குவதாக, வெளியுறவு செயலாளர் அன்ரனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தாக்குதல்களை எதிர்கொள்ள பீரங்கிகளும் குண்டுகளும் தேவை என முன்பு உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி கோரிக்கை விடுத்திருந்தமைக்கு அமைய இந்த உதவி வழங்கப்படுகின்றது.

ஆறுகள் மற்றும் பள்ளங்களை கடக்க அனுமதிக்கும் கவச வாகனங்கள் உள்ளிட்ட இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு வழங்குவது குறித்து எதிர்வரும் வாரங்களில் ஆலோசிக்கப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பாக்முட் மீதான அதன் பல மாத தாக்குதலைத் தொடர்ந்தது, ரஷ்ய கூலிப்படையினர் கிழக்கு டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள நகரத்தை சுற்றி வளைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தனியாக, கடந்த செப்டம்பரில் ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட கார்கிவ் பிராந்தியத்தின் வடகிழக்கு நகரமான குபியன்ஸ்கில் பகுதியளவு வெளியேற்றத்துக்கு உக்ரைன் உத்தரவிட்டுள்ளது. (அ)

# பணத் தட்டுப்பாட்டை ரஷ்யா மிகவிரைவில் எதிர்நோக்கும்!

மொஸ்கோ, மார்ச் 06

நட்பு நாடுகளிடமிருந்து முதலீடுகளைப் பெறாவிட்டால், அடுத்த ஆண்டு விரைவில் ரஷ்யா பணத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் என ரஷ்ய தன்னார்வலர் ஒலெக் டெரிபாஸ்கா தெரிவித்துள்ளார்.

எங்களுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேவை, அடுத்த ஆண்டு ஏற்கனவே பணம் இருக்காது என டெரிபாஸ்கா தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ரஷ்யாவின் யுக்ரைன் மீதான ஆக்கிரமிப்பினால், ஆரம்ப நாட்களில் யுக்ரைனில் மொஸ்கோவின் போரை முடிவுக்குக் கொண்டு வர அவர் அழைப்பு விடுத்தார்.

நிதி குறைவாக உள்ளது என்றும், அதன்காரணமாக ரஷ்ய அரசாங்கம் முன்னதாகவே ரஷ்யாவின் முயற்சியாளர்களை சிரமத்துக்கு உள்ளாகியுள்ளது.

மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா கடுமையான அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு முதலீடுகள் அதிகமாக தேவைப்படுவதாக ரஷ்யாவின் தன்னார்வலர் ஒலெக் டெரிபாஸ்கா குறிப்பிட்டுள்ளார். (அ)




# ஒரு நாள் தொடரை வென்ற இங்கிலாந்து!

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என முன்னிலைப்பெற்ற இங்கிலாந்து அணி, தொடரையும் வென்றுள்ளது.

இதேவேளை கடந்த 2016ஆம் ஆண்டுக்கு பிறகு சொந்த மண்ணில், பங்களாதேஷ் அணி ஒருநாள் தொடரை வென்றது.

மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 326 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 327 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 44.4 ஓவர்கள் நிறைவில் 194 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால், இங்கிலாந்து அணி 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 124 பந்துகளில் ஒரு சிக்ஸர் 18 பவுண்ரிகள் அடங்களாக 132 ஓட்டங்ளை பெற்றுக்கொண்ட ஜேஸன் ரோய் தெரிவு செய்யப்பட்டார்.

# பற்றிக்ஸ்க்கு பரபரப்பான வெற்றி




யாழ்ப்பாணம் கல்லூரிக்கும் சென். பெற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் யாழ்ப்பாணம் கல்லூரி மைதானத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற 30ஆவது வருடாந்த ஒருநாள் (50 ஓவர்) கிரிக்கெட் போட்டியில் மிகவும் பரபரப்பான முறையில் ஒரு பந்து மீத மிருக்க 5 ஓட்டங்களால் சென் பற்றிக்ஸ் வெற்றிபெற்று ராஜன் கதிர்காமர் கிண்ணத்தை சுவீகரித்தது.

துடுப்பாட்டத்தில் அபரிமித மாக பிரகாசித்து அரைச் சதம் பெற்ற எம். சௌதியன், மிகவும் சாமர்த்தியமாக கடைசி ஓவரை வீசி அணியின் வெற்றியை உறுதி செய்தார். சகல துறைகளிலும் பிரகாசித்த அவர் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி ஆட்டநாயகனாக தெரிவானார்.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த சென் பற்றிக்ஸ், ஐ. யெஸ்ரிகன், எம். சௌதியன் ஆகியோரின் சாதனை மிகு 151 ஓட்ட ஆரம்ப விக்கெட் இணைப்பாட்ட உதவியுடன் 47.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய எம். சௌதியன் 94 பந்துகளை எதிர்கொண்டு 7 பவுண்டறிகள், 4 சிக்ஸ்களுடன் 82 ஓட்டங்களையும் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடிய யெஸ்ரிகன் 103 பந்துகளில் 7 பவுண்டறிகள் ஒரு சிக்ஸுடன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்கள் இருவரும் மொத்த எண்ணிக்கை 151 ஓட்டங்களாக இருந்தபோது ஆட்டம் இழந்தனர்.

அவர்களைவிட அணித் தலைவர் எஸ். கீர்த்தன் 18 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணம் கல்லூரி அணி பந்துவீச்சில் எஸ். நர்த்தனன் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் பி. பிருந்தன் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ரி. ரொய்ஸ் ஜென்சன் 57 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

226 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் கல்லூரி அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் கிண்ணத்தை தவற விட்டது.

முதல் 2 விக்கெட்களை 32 ஓட்டங்களுக்கு இழந்து தடுமாற்றம் அடைந்த யாழ்ப்பாணம் கல்லூரி அணிக்கு 3ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த ரீ. டேமியன், எஸ். மதுஷன் ஆகிய இருவரும் 82 ஓட்டங்களைப் பகிர்ந்து உற்சாகம் கொடுத்தனர்.

டேமியன் 34 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்த பின்னர் மதுஷனுடன் 4ஆவது விக்கெட்டில் இணைந்த எஸ். நர்த்தனன் 43 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

79 பந்துகளை எதிர்கொண்ட மதுஷன் 7 பவுண்டறிகள் அடங்கலாக 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய நர்த்தனன் 27 ஓட்டங்களையும் பி. பிரதீப் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் கடைசி ஓவரில் யாழ்ப்பாணம் கல்லூரியின் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

கடைசி ஓவரை துணிச்சலுடன் சாமர்த்தியமாக வீசிய சௌதியன் 2 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்ததுடன் கடைசி விக்கெட் ரன் அவுட் முறையில் விழ சென் பற்றிக்ஸ் அணி மிகவும் பரபரப்பான வெற்றியை ஈட்டி ராஜன் கதிர்காமர் கிண்ணத்தை சுவீகரித்தது.

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற 2 நாள் கிரிக்கெட் போட்டியிலும் சென் பெற்றிக்ஸ் வெற்றிபெற்றிருந்தது.

இந்த இரண்டு கல்லூரிகளுக்கும் இடையிலான இருபது 20 கிரிக்கெட் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.



# டேனில் மெத்விதேவ் சம்பியன்

டுபாய் ஓபன் சர்வதேச ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்தது.

இதில் நேற்று முன் தினம் நடந்த ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருக்கும் ரஷிய வீரர் டேனில் மெத்விதேவ் சக நாட்டு வீரர் ஆந்த்ரே ரூப்லெவ் உடன் மோதினார். இந்த ஆட்டத்தில் மெத்விதேவ் 6-2, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். அவர் வென்ற 18ஆவது பட்டம் இதுவாகும். சாம்பியன் பட்டம் வென்ற மெத்விதேவுக்கு 500 தரவரிசை புள்ளியுடன் ரூ.4.36 கோடி பரிசாக கிடைத்தது. 2ஆவது இடம் பெற ரூப்லெவுக்கு ரூ.2.34 கோடி கிட்டியது.

# இந்தூர் ஆடுகளம் மோசமானது

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் இரண்டரை நாட்களுக்குள் முடிவடைந்த டெஸ்ட் போட்டிக்கு பயன்படுத்தப்பட்ட இந்தூர் ஆடுகளம் மோசமானது என ஐசிசி அறிவித்துள்ளது.

அப்போட்டியில் 9 விக்கெட்களால் வெற்றியீட்டிய அவுஸ்திரேலியா, ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

இந்நிலையில் அப்போட்டிக்கு பயன்படுத்தப்பட்ட ஆடுகளம் மோசமானது என ஐ.சி.சிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் போட்டி பொது மத்தியஸ்தர் க்றிஸ் ப்றோட் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அந்த ஆடுகளத்துக்கு 3 தகுதிநீக்கப் புள்ளிகளையும் அவர் வழங்கியுள்ளார்.

அப்போட்டி துடுப்பாட்டத்துக்கும் பந்துவீச்சுக்கும் இடையில் சம அளவில் மோதிக்கொள்ளப்படவில்லை என தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள க்றிஸ் ப்றோட், ஆரம்பத்திலிருந்தே சுழல்பந்துவீச்சு ஆதிக்கம் வெளிப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தகுதிநீக்கப் புள்ளிகளை எதிர்த்து மேன்முறையீடு செய்ய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 14 நாள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, 5 வருட காலப் பகுதிக்குள் ஏதேனும் ஒரு ஆடுகளத்திற்கு 5 தகுதி நீக்க (அபராதம்) புள்ளிகள் வழங்கப்பட்டால் அந்த ஆடுகள மைதானத்திற்கு ஒரு வருட சர்வதேச போட்டித் தடை விதிக்கப்படும்.

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகள் நடைபெற்ற மைதானங்களின் ஆடுகளங்களின் தன்மை சராசரி என பொது மத்தியஸ்தர் அண்டி பைக்ரொவ்ட் அறிவித்திருந்தார்.

ஆறு வருடங்களுக்கு முன்னர் பூனேயில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்ட ஆடுகளம் மோசமானது என ஐ.சி.சி அறிவித்திருந்தது. அப்போட்டியிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றிருந்ததுடன் பொது மத்தியஸ்தராக க்றிஸ் ப்றோட்தான் செயல்பட்டிருந்தார்.



இது இவ்வாறிருக்க, "இந்த (இந்தூர்) ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு பொருத்தமானதல்ல என ஐ.சி.சி முத்திரை குத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது" 2ஆம் நாள் ஆட்டம் தொடர்பான செய்தி அறிக்கையில் வீரகேசரி குறிப்பிட்டிருந்தது.

# அதிக உடற்பருமன் ஆபத்துக்கு உரியது!

## விசேட வைத்திய நிபுணர் நிர்ஞ்சலா மீகொட

கொழும்பு, மார்ச் 06

அதிக உடற்பருமன் என்பது ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றென்றும் எனவே அது தொடர்பில் கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் விசேட வைத்திய நிபுணர் நிர்ஞ்சலா மீகொட விதானகே தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் மார்ச் 4ஆம் திகதி உடல் பருமன் விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில் இதனை யொட்டி நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், “அதிக உடற்பருமன் என்பது ஒரு நோய் நிலைமையாகவே கருதப்படுகின்றது. அமெரிக்கா போன்ற நாடுகள் இதனை ஒரு நோய் நிலைமையாக ஏற்றுக்கொண்டுள்ளன.

அதிக உடற்பருமன் என்பது ஏனைய பல நோய்கள் எடுபடுவதற்கும் அடிப்படை காரணமாக அமைந்துள்ளது. இதில் பிரதானமாக நீரிழிவு நோய் காணப்படுகின்றது.

தொற்றா நோய்களின் வகைப்பிரிவில் முதல் ஐந்து நோய்நிலைமைகளுக்குள் நீரிழிவு நோயும் ஒன்றாகும். உலக சனத்தொகையில் 537 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையை எடுத்துக் கொண்டால் நகர பிரதேசங்களில் நூற்றுக்கு 26 சதவீதமான வயோதிபர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முழு நாட்டின் நிலைமையை அவதானித்தால், உலக புள்ளிவிவரத்துக்கு ஒப்பாக அந்தத் தொகை காணப்படுகின்றது.

ஓரளவு உடற்பருமனையுடையவர்களைவிட அதிக உடற்பருமனையுடையவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஆறு பங்கு அதிகமாகக் காணப்படுகின்றது.

உடற்பருமன் அதிகரிக்க அதிகரிக்க நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது.

அதிக உடற்பருமனை உடையவர்கள் நீரிழிவு நோய்க்கு உட்பட்டால், அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் கடினமாக உள்ளது.

சிகிச்சையளிப்பதற்கு அவர்களது உடல் பங்களிப்பு செய்வதும் குறைவாகவே இருக்கும்.

அதேபோன்று உடற்பருமனை குறைத்துக்கொள்வதிலும் அவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே அதிக உடற்பருமனை உடையவர்கள் நீரிழிவு நோய்க்கு உள்ளாகும்போது நாட்கள் செல்லசெல்ல நிலைமை மோசமடையும்.

நீரிழிவு நோய் எனும்போது இதய நோய், பக்கவாதம், உயர் இரத்த அழுத்தம் போன்றவை ஏற்படுவதற்கும் காரணியாக அமைகின்றது-என்றார். (அ-கே)



# உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் இலங்கையில் இறக்கம்

கொழும்பு, மார்ச் 06

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான எயார்பஸ் ஏ-380-800 நேற்று காலை மூன்றாவது தடவையாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான ஈ.கே-449 என்ற விமானம் நேற்று அதிகாலை 3.10 மணியளவில் நியூசிலாந்தின் ஒக்லாந்தில் இருந்து டுபாய் நோக்கி பயணிக்கும்போது எரிபொருளை பெறுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தது.

மிகப்பெரிய பயணிகள் விமானம் 2019 ஆம் ஆண்டு கொரோனா தொற்றுக்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

மீண்டும் நேற்று அதிகாலை வந்த விமானத்தில் 413 பயணிகள் மற்றும் 29 பணியாளர்கள் இருந்தனர். அவர்கள் யாரும் விமானத்தை விட்டு வெளியே வரவில்லை.

டுபாய் விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இந்த விமானம் டுபாய் விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் தரையிறங்குவது கடினம். இதனால் விமான நிலையம் அமைந்துள்ள வானில் பல சுற்றுகள் விமானம் பயணிக்க தேவையான எரிபொருளை கட்டுநாயக்க விமான நிலைத்தில் பெற விமானிகள் முடிவு செய்துள்ளனர்.

அதற்கமைய, இந்த விமானத்திற்கு ஒரு கோடியே 68 இலட்சம் ரூபா பெறுமதியான 62,800 லீற்றர் ஜெட் ஏ-1 எரிபொருளை வழங்குவதற்கு கட்டுநாயக்க விமான நிலைய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்கள் செலவிடப்பட்டுள்ளது. ஏ 380 ரக விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை 04.50 மணியளவில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு டுபாய் நோக்கி புறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர்களிடையே வைரஸ் நோய் நிலைமை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 06

நாட்டில் தற்போது சிறுவர்களிடையே வைரஸ் நோய் நிலைமை அதிகரித்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.விஜேசூரிய இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தொண்டை வலி, காய்ச்சல் மற்றும் இருமல் என்பன இதற்காக நோய் அறிகுறிகள் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ரயிலில் மோதுண்டு நபரொருவர் மரணம்

கொழும்பு, மார்ச் 06

பதுளை, ஹப்புத்தளை - இதல்கஸ்ஹின்ன பிரதேசத்தில், நபரொருவர் ரயிலில் மோதுண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதல்கஸ்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 50 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில், ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-கே)

# ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 06

களுத்துறை ஹொரண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வகவத்த பிரதேசத்தில், 38 வயதுடைய ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

போருதுவண்டன பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் உடல்நல குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-கே)

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்று ரீதியிலான தீர்ப்பு!

கொழும்பு, மார்ச் 06

உள்ள10ராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வரலாற்று ரீதியிலான தீர்ப்பை வழங்கியுள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேதமாஸ தெரிவித்துள்ளார்.

காலி பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நிதியை வழங்காமல் இருப்பதனூடாக உள்ள10ராட்சிமன்ற தேர்தலை ஒத்திவைப்பதற்கு இந்த அரசாங்கமானது பாரிய முயற்சிகளை மேற்கொண்டது.

எனினும் மக்களின் ஜனநாயக உரிமையை நிலைநாட்டுவதற்காக



உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. வரலாற்று ரீதியிலான தீர்ப்பாகவே இதனை நாம் கருத வேண்டும்.

கடந்த வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வருகை தந்து நகைச்சுவை நாடகமொன்றை அரங்கேற்றினார்.

தேர்தலை நடத்துவதற்கு போதிய நிதியும் இல்லை. நிதியை வழங்குவதற்கான எதிர்பார்ப்பும் இல்லை. நிதி இருந்தாலும் அதனை வழங்குவதற்கான அவசியம் இல்லை. ஏனெனில் தேர்தலொன்று இல்லை என்று ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கூறினார்.

எனினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் மிகத் தெளிவான உத்தரவை பிறப்பித்துள்ளது.

எனவே தேர்தலை நடத்துவதற்கான நிதியை அரசாங்கம் வழங்கியே ஆக வேண்டும்.

அந்த நிதி 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தினூடாக தேர்தலுக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியாகும். எனவே அந்த நிதியை அரசாங்கம் வழங்கியே ஆக வேண்டும்-என்றார். (அ-கே)

# ஹெரோய்னுடன் 04 பெண்கள் உள்ளடங்கலாக 10 பேர் கைது

கொழும்பு, மார்ச் 06

கண்டி பொலிஸ் பிரிவுக்கு பேசியர் தோட்டத்தில், பொலிஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது, ஹெரோய்ன் போதைப் பொருளுடன் நான்கு பெண்கள் உள்ளடங்களாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 39 கிராம் 265 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹிருஸ்ஸகல, சுதும்பொல, மஹய்யாவ, கண்டி மற்றும் திகண ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26, 24, 49, 52 வயதுகளையுடை 10 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-கே)

# வெடிபொருட்களுடன் இரண்டு பேர் சிக்கினர்

கொழும்பு, மார்ச் 06

காலி நாகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில், அனுமதிப்பத்திரமின்றி வெடிப்பொருட்களை முச்சக்கர வண்டியொன்றில் கொண்டு சென்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரன்னாகல மற்றும் கனத்தகொட ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 24 மற்றும் 37 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 04 வோட்டர் ஜெல் குச்சிகள், சுமார் 2 கிலோகிராம் அமோனியம், 10 டெட்டனேட்டர் குச்சிகள் என்பற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## கதிர்காமத்தில்...

விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலமான கோரிக்கை விடுத்துள்ளார்.

பக்தர்களுடன் உறவாடும்போது பாதுகாப்பு படையினர் பக்தர்களுக்கு பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பஸ்நாயக்க நிலமே குறிப்பிட்டுள்ளார்.

படையினரின் இந்த நடவடிக்கைகளினால் முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதியின் கௌரவத்துக்கு கேடு விளைவிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஆலயத்தின் பாதுகாப்புக்காகக் கடமையாற்றிய பொலிஸார் பக்தர்களுக்கு நல்லதொரு சிநேகபூர்வ சேவையை வழங்கியதால் பாதுகாப்புப் படையினரை ஆலய வளாகத்தில் இருந்து அகற்றிவிட்டு ஆலயத்தை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு பஸ்நாயக்க நிலமே மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விகாரையின் பாதுகாப்பு கடமைகளில் இருந்து இராணுவத்தினர் நீக்கப்பட்டபோதிலும், பெரஹரா திருவிழாவின்போது அவர்கள் வழங்கும் சிறந்த சேவையை பாராட்டுவதாகவும் பஸ்நாயக்க நிலமே குறிப்பிட்டுள்ளார். (அ)

## இலங்கை மீது...

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழு வெளியிட்ட சிறப்பு அறிக்கைக்கு மறுநாள் வியாழக்கிழமை இந்தியாவும் இலங்கை தொடர்பான சிறப்பு அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய ஊடகங்களில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அமெரிக்கா வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்த அறிவிப்பும் வெளியிடப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேன்மைப்படுத்துவ தற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து கூட்டு முயற்சியில் ஈடுபடவுள்ளதாகவும், இலங்கையின் பாதுகாப்பு நிலைமையை பலப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் அவற்றுள் முக்கியமானதாக இருக்கும் எனவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கோவிட் - 19 பெருந்தொற்றுக்குப் பின்னர் மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப இந்தியா கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர்களை வழங்கியதாகவும், அமெரிக்காவும் கோவிட் பெருந்தொற்று காலத்தில் 3.4 மில்லியன் டொலர் மற்றும் 70 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியதாகவும் அந்த அறிவிப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலத்துக்குப் பிந்தைய காலத்தில் 9 கடன் தொகை வழங்கப்பட்டது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சமூக பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த கடிதத்தின்மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்கு சீனா ஆதரவு வழங்குவதைத் தவிர்த்து வந்தபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சித்தபோதும் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரச...

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 40 வீத ஆட்குறைப்பு தொடர்பில் அமைச்சரவை பத்திரமும் அடுத்த மாதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## போதை...

பேணி வரும் ஒருவரின் உறவினரே இவ்வாறு போதைமாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். இதேவேளை, 4 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

எழுதுமட்டுவாழ் பகுதியில் வைத்து கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபரே நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## இலங்கை கடல்...

இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கும் யோசனை இந்திய அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைக்கு இலங்கை அரசாங்கமும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இந்த யோசனை தொடர்பில் சாதகமான பிரதிபலிப்பை வெளியிட்டிருந்தார்.

இந்த யோசனைக்கு தாம் எதிரானவர் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்தியாளர் சந்திப்பொன்றில் சூசகமாக தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை அனுமதிக்கும் யோசனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக வடக்கு மாகாணத்திலுள்ள கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை.

நேற்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களை அனுமதிப்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய விடயம் தொடர்பில், கடற்றொழிலாளர் சங்கங்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்ட எதிர்ப்பு கடிதத்தை இலங்கை, இந்திய அரசுகள், தமிழக அரசுக்கு அனுப்பி வைப்பதென நேற்று தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள இந்திய தூதரகம், யாழிலுள்ள துணைத்தூதரகங்களில் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

அத்துடன், தேவைப்படின் இலங்கை அரச தலைவர்களை சந்தித்து பேசுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர, இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களை அனுமதிக்கும் யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டமொன்றை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இழுவைமடி தொழில் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையெடுக்குமாறும் அந்த கடிதத்தில் கோரவுள்ளனர். (அ)

# முன்னணி இலத்திரனியல் ஊடகத்துக்கு எதிராக மிகவிரைவில் சட்ட நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 06

நாட்டின் முன்னணி இலத்திரனியல் ஊடகம் ஒன்றினால் ஒளிபரப்பப்பட்ட பல நிகழ்ச்சிகளினால் பாராளுமன்றத்துக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழு தீர்மானித்துள்ளதாக சிங்கள வார ஏடொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24, 25 மற்றும் 27 ஆம் நாட்கள் இந்த சம்பவம் தொடர்பாக ஊடகங்கள் ஒளிபரப்பிய பல நிகழ்ச்சிகளைச் சிறப்புரிமைக் குழு ஆய்வு செய்ததுடன், இது தொடர்பாக சட்டமா அதிபரின் கருத்தும் அவதானிப்புக்களும் பெறப்பட்டுள்ளன.

சிறப்புரிமைக் குழுவினால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையின்படி, குழுவானது பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபருக்கு இந்த விடயத்தை பரிந்துரைத்துள்ளதுடன், மேற்படி ஊடக அமைப்புக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 32 அரச நிறுவனங்கள் ஊழல் நிறைந்தவை!

கொழும்பு, மார்ச் 06

420 பொது நிறுவனங்களில் 32 நிறுவனங்கள் அதிக ஊழல் மற்றும் பெரும் நட்டத்தை ஏற்படுத்தியவை என கோப் குழு அடையாளம் கண்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார்.

இந்த நிறுவனங்கள் மூன்று வருடங்களில் 46,500 கோடி ரூபாய் நட்டத்தை சந்தித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஊழியர்களைக் கவனிப்பதற்காகவே இன்று சில நிறுவனங்கள் இயங்குவது வேதனையான விடயம் எனவும் அவர் கூறினார்.

வினைத்திறன் அற்ற அரச நிறுவனங்களை வினைத்திறனுள்ள நிலைக்குக் கொண்டு வருவதற்கான பொறிமுறையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசாங்க வேலைகள் தொடர்பில் முறையான கணக்காய்வு மற்றும் தலையீடு அவசியமானது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

சில நிறுவனங்கள் பயனற்ற திட்டங்களைக் கொண்டு வந்து பண மோசடி செய்வதாகவும், இந்த நிறுவனங்களைக் காப்பாற்ற தனியார்மயமாக்கல் தீர்வாகாது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## யாழ்.மாநகர...

விலகியதை அடுத்து முன்னர் முதல்வராக இருந்து பதவி இழந்த இ.ஆர்னோல்ட் மீண்டும் முதல்வரானார்.

ஆயினும் அவர் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்ததை அடுத்து மீண்டும் அவர் பதவி இழந்தார்.

இந்நிலையில் மீண்டும் இடம்பெறும் முதல்வர் தெரிவுக்கு இம்முறை சொலமன் சிறில் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை முதல்வர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி உள்ளூராட்சிச் சபைகள் அனைத்தும் கலைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மார்ச் 19...

பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக கையொப்பம் இட்டுள்ள கடிதமொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப் பப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விடுத்துள்ளன.

சட்டப்படி தேர்தலை நடத்துவதற்கு இருந்த ஒரேயொரு தடையை உயர் நீதிமன்றம் இப்போது நீக்கியுள்ளதால், எதிர்வரும் மார்ச் 19 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த தேர்தல் நடத்தப்படவேண்டும்.

எனினும், இது சம்பந்தமாக திறைசேரிச் செயலாளருடனோ வேறு எவருடனுமோ நீங்கள் கலந்துரையாடத் தேவையில்லை" என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் மார்ச் 19 ஆம் திகதி முன்னதாக, தேர்தலை நடத்தக்கூடிய திகதியை தாமதமின்றி நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை, நாளை காலை 9 மணிக்கு தேர்தல்கள் செயலகத்தில் சந்திக்க விரும்புவதாகவும் எதிர்க்கட்சிகள் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளன. (அ)

## ஓய்வுநிலை...

அல்லது அங்கவீனமுற்ற, உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆறு பிள்ளைகளுக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவுகள் அனைத்தும் 1977 ஆம் ஆண்டின் பாராளுமன்ற ஓய்வுநிதியச் சட்டத்தின்படி மாதாந்த கொடுப்பனவுகளைப் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 448 ஆகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அமெ.செனட்...

அரசாங்கமும் இந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு சூழ்நிலையிலும் தனது வெளியுறவுக் கொள்கையைத் தயாரிக்கிறது.

மேலும் இந்த குழு மோசடி மற்றும் ஊழல் இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடன் இயங்கும் அரசாங்கங்களுக்கு உதவுகிறது. அந்த நாடுகளும் மனித உரிமைகளை மதிக்கவேண்டும். அதற்கு சிறந்த உதாரணம் 2021 இல் இலங்கையை அடிப்படையாகக் கொண்ட இந்தக் குழுவால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலமாகும்.

அத்துடன், 2022 ஆம் ஆண்டு இந்தக் குழுவினால் வெளியிடப்பட்ட பரிந்துரையில், இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு, மத்திய வங்கியின் சுதந்திரம் நிலை நாட்டப்படவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

அதன்படி, அந்தக் காலகட்டங்களில், இந்தக் குழுவின் செல்வாக்கு அதிகாரத்தை அவர்கள் நன்கு அறிந்திருந்ததால், அந்த பரிந்துரைகளை கடிதம் மூலம் நடைமுறைப்படுத்துவதில் அரசும் அக்கறை செலுத்தியது.

இதன்படி, இம்முறை செனட் சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசாங்கம் முறையாக நடத்தாது விட்டால், நாட்டுக்கு பெரும் பாதகமான முடிவுகள் அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

## நாணய நிதியத்தின் கடனுதவி இம்மாதத்துக்குள் கிடைக்கும்!

கொழும்பு, மார்ச் 06

சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை இம்மாதத்திற்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின்போது அவர் இதனைக் கூறியுள்ளார். (அ)

## பாலைதீவு சென்றார் அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாணம், மார்ச் 06

பூநகரி, பள்ளிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பாலைதீவு பகுதியில் நீர்வேளாண்மை உற்பத்திகளுக்கு பொருத்தமான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதிக்கான கள விஜயத்தை அதிகாரிகள் சகிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது, பாலைதீவு அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆலயத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்வரும் 08ஆம் திகதி பாலைதீவு அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமாகவுள்ள கொடியேற்றத் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும் ஆலய புனரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்கவும் உறுதியளித்துள்ளார்.

நீர்வேளாண்மை உற்பத்திகளான கடலட்டை மற்றும் கடல்பாசி வளர்ப்பு போன்றவற்றை பாலைதீவை அண்டிய பகுதிகளில் ஆய்வு ரீதியாக அடையாளப் படுத்தப்பட்ட இடங்களில், தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடனும், பாலைதீவை அண்மித்த பிரதேச மக்களின் பங்களிப்புடனும் மேற்கொள்வது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடினார்.

மேலும், கடற்றொழிலாளர்களுக்கு மேலதிக வாழ்வாதாரத்தை வழங்கக்கூடிய, குறித்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற தரப்புகள், கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்பதுடன் பாலைதீவு அந்தோனியார் ஆலய புனரமைப்பு மற்றும் திருவிழா காலச் செலவீனங்களுக்கும் பங்களிப்பு செய்யவேண்டும் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வைத்தியர் பயணித்த கார் விபத்து

கொழும்பு, மார்ச் 06

பேராதனை போதனா மருத்துவமனையின் விசேட வைத்தியர் ஒருவர் செலுத்திய காரொன்று திடீர் இயந்திரக் கோளாறு காரணமாக வீதியை விட்டு விலகி கண்டி வாவிக்குள் வீழ்ந்ததில் குறித்த வைத்தியர் காயமடைந்து கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற குறித்த விபத்தில் வைத்தியரின் மனைவியும் காருக்குள் இருந்துள்ளார். அவரும் கண்டி தேசிய மருத்துவமனையில் விசேட வைத்தியராக பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில், சிறிய காயங்களுக்கு உள்ளான அவரும் கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர் நியமனம் தாமதமாகும்?

கொழும்பு, மார்ச் 06

**தேசிய தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது மேலும் தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**சுயாதீன ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெறுவதற்கான தகுதியுடைய உறுப்பினர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது பெப்ரவரி 15ஆம் திகதியுடன் முடிவடைந்தது.**

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை கடந்த மாதம் அரசியலமைப்புச் சபை கோரியது.

அரசியலமைப்பின் 41பி பிரிவின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் கீழ் நியமனங்கள் செய்யப்படவுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை, தகுதியற்ற நபர்களால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நபர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆணைக்குழுக்களில் உறுப்பினர்களாவதற்கு விண்ணப்பித்திருப்பதனால் தெரிவுச் செயற்பாடுகள் சிக்கலானதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசியலமைப்பு சபை மீண்டும் அமைக்கப்பட்டது. (அ)

## சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு ஆயிரத்து 600 பேர் விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 06

அரசமைப்பு பேரவை விண்ணப்பங்கள் கோரப்பட்டதை அடுத்து 9 சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர் பதவிகளுக்கு 1,600 இற்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட 9 சுயாதீன ஆணைக் குழுக்களின் ஆணையாளர்களாக நியமனம் செய்வதற் காக இந்த விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இன்னும் சில வாரங்களில் அரசமைப்பு பேரவை கூடி அந்தந்த ஆணைக்குழுக்களுக்கு பொருத்தமான நபர்களை தெரிவு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுப் பரீட்சைகள் தாமதமாகும் நிலை

### ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 06

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தாமதமாகுவதால், பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஏனைய பரீட்சைகளும் தாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு 2000 ரூபா என்ற கொடுப்பனவு போதுமானதாக அமையாது என்று அவர் குறிப்பிட்டார்.

மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான நாளாந்த கட்டணம் 3000 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

## முன்னேறியது இலங்கை

கொழும்பு, மார்ச் 06

உலக பொருளாதார நெருக்கடியால் தர வரிசைச் சுட்டெண்ணின் சமீபத்திய தர வரிசையின்படி பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை 115 ஆவது இடத்துக்கு சென்றுள்ளதாக பாண்ட் பினான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாண்ட் பினான்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

உலகில் பொருளாதார நெருக்கடியால் தர வரிசை சுட்டெண்ணின் சமீபத்திய தர வரிசையின்படி பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை 115 ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது. அந்த தர வரிசையின்படி, கடந்த ஆண்டு இலங்கை 73 ஆவது இடத்தில் இருந்தது.

கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை அனுபவித்த சம்பியா மற்றும் மியான்மர் போன்ற நாடுகள் முறையே 113 மற்றும் 114 ஆவது இடத்திலும், ஈராக் 116 ஆவது இடத்திலும், லாவோஸ் 117 ஆவது இடத்திலும், உகண்டா 118 ஆவது இடத்திலும் உள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் தர வரிசை குறித்து பாண்ட் பினான்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இந்த உலகளாவிய சுட்டெண்ணின் படி, இந்த ஆண்டு மந்த நிலையின் அடிப்படையில் மிக உயர்ந்த நிலைமையை தெரிவிக்கும் நாடாகவும் இலங்கை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## விவசாய இரசாயன தடையால் 24 ஆயிரம் கோடி ரூபா நட்டம்!

கொழும்பு, மார்ச் 06

உரம் உள்ளிட்ட விவசாய இரசாயனங்களின் தடைகாரணமாக கடந்த வருடம் 24 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞான பிரிவு முன்னெடுத்த ஆய்வில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

உர இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக கடந்த வருடத்தின் பெரும் போகத்தில், நெல் உற்பத்தி சுமார் 36 வீதத்தால் குறைந்துள்ளதாக அந்த பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ் ஞானம் மற்றும் புள்ளி விபர வியல் பிரிவின் பேரா சிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

அத்துடன், கடந்த வருடத் தின் சிறுபோகத்தில் நெல் உற்பத்தி சுமார் 30 சதவீதத்தால் குறைந்துள்ளது.

இந்தநிலையில், கடந்த ஆண்டு நெல் உற்பத்தி 17 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் டன்னாக குறைந்துள்ளதுடன், அதன் பெறுமதி 175 பில்லியன் ரூபாவிற்கும் அதிகம் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு விரைவில் வரிக் கோப்பு திறப்பு!

கொழும்பு, மார்ச் 06

2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வருமான வரிக் கோப்புகளைத் திறக்கும் பணி விரைவில் தொடங்கும் என்று அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தின் தரவுகளின்படி, சுமார் 1,65,19,036 (1,65,19,036) புதிய வரிக் கோப்புகள் திறக்கப்பட வேண்டும்.

கிடைத்துள்ள சமீபத்திய தகவல்களின்படி, பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி 18 வயதுக்கு மேற்பட்டவர்களை அடையாளம் காண திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 168,11,341 ஆக இருக்கும்.

இவர்கள் அனைவரும் 18 வயது நிறைவடைந்துள்ளதால், அவர்களுக்கான வரிக் கோப்புகளைத் திறக்க வேண்டும். ஆனால், தற்போது தனி வரி செலுத்துவோராக பதிவு செய்துள்ள இருநூற்று தொண்ணூற்று இரண்டாயிரத்து முன்னூற்று ஐந்து பேர் இவர்களில் இருந்து நீக்கப்பட வேண்டும். அப்போது புதிய வரிக் கோப்புகளைத் தொடங்க வேண்டியவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து அறுபத்தைந்து லட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தாறு.

புதிய வரிக் கோப்புகள் திறக்கப்பட்டாலும், இந்த மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 19 லட்சம் வளமான குடும்பங்கள் உள்ளன.

சமுர்த்தி சலுகைகளை கோரும் சுமார் 6 இலட்சம் குடும்பங்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளடங்கியுள்ளன.

18 வயதுக்கு மேல் வருமானம் பெறாத ஆயிரக்கணக்கான க.பொ.த. உயர்தர மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளனர். இந்த மக்களுக்கான வரிக் கோப்புகள் திறக்கப்பட்டாலும் அவர்கள் விரும்பிய வரி வருமானத்தைப் பெற முடியவில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத பேச்சாளர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.